விலை : 20.00
பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 19 சனிக்கிழமை (05.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே


# புலிகளைத் தோற்கடிக்க இந்தியாவும் உதவியது!

## பிரதமர் பாராளுமன்றில் உரை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் கடலில் போரிடுவதற்குத் தேவையான புலனாய்வுத் தகவல்களை அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கை கடற்படைக்கு வழங்கியதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்குத் தேவையான புலனாய்வு உதவிகளை வெளிநாடுகளிடம் இருந்து கடற்படைக்குப் பெற்றுக் கொடுத்திருந்தேன் எனவும் கூறினார்.

23ஆம் பக்கம் பார்க்க



## பட்ஜெட்டுக்கு எதிராக பாரிய போராட்டம்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்ட யோசனைக்கு எதிராக எதிர்வரும் 15ஆம் திகதி பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க ஒன்றியம் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட போதிலும், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள மக்கள் விரோத

23ஆம் பக்கம் பார்க்க

## இலஞ்சம் கேட்டால் அழையுங்கள் 1954

(யாழ்ப்பாணம்)

அரச அதிகாரிகள் மக்களுக்காக கடமையாற்ற வேண்டியவர்கள். அவர்களிடமிருந்து சேவைகளை பெற்றுக்கொள்ள மக்களுக்கு உரிமையுண்டு. அதற்காக இலஞ்சம்

23ஆம் பக்கம் பார்க்க

## 3 நாட்களுக்கு மழை நீடிப்பு

(கொழும்பு)

3 நாட்களுக்கு மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நீடிப்ப

23ஆம் பக்கம் பார்க்க

## கருணாவை நியமித்தது சரியான தீர்மானமே!

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள உறுப்பினர் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உப தலைவராகவும் பிரதியமைச்சராகவும் நியமித்தமை சரியான தீர்மானம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டம் தொடர்பான

23ஆம் பக்கம் பார்க்க

## ஆட்சிக் காலத்தில் தவறிழைத்தேன்!

## தமிழக மக்கள் குறித்து கரிசனையுடன் உள்ளோம்

### சம்பந்தன் எம்.பி அறிக்கை

(கொழும்பு)

இந்தியாவின் நான்காவது பெரிய நகரான சென்னையில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் மிகுந்த கரிசனையோடு உள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயற்கையின் சீற்றத்தினால்

23ஆம் பக்கம் பார்க்க

## மூன்றாம் தவணை விடுமுறை இன்று

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பாடசாலைகள் மூன்றாம் தவணை விடுமுறைக்காக இன்று மூடப்படவுள்ளன.

ஏனைய பாடசாலைகளுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணைக்கான பாடசாலை நடவடிக்கைகள் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம்

24ஆம் பக்கம் பார்க்க

உறுப்பினர் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உப தலைவராகவும் ... மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டம் தொடர்பான

23ஆம் பக்கம் பார்க்க

# சம்பந்தன் எம்.பி அறிக்கை

(கொழும்பு)

இந்தியாவின் நான்காவது பெரிய நகரான சென்னையில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் மிகுந்த கரிசனையோடு உள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயற்கையின் சீற்றத்தினால்

23ஆம் பக்கம் பார்க்க

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பாடசாலைகள் மூன்றாம் தவணை விடுமுறைக்காக இன்று மூடப்படவுள்ளன.

ஏனைய பாடசாலைகளுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணைக்கான பாடசாலை நடவடிக்கைகள் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம்

24ஆம் பக்கம் பார்க்க

# ஆட்சிக் காலத்தில் தவறிழைத்தேன்!

## மகிந்த எம்.பி கவலை

(கொழும்பு)

ஜனாதிபதியாக நான் பதவி வகித்த காலத்தில், தன்னால் முன்னெடுக்கப்பட்ட சில விடயங்கள் தவறானவை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், நாடாளுமன்றத்தில் முதல் முறையாக நேற்று உரையாற்றினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெறும் பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு

24ஆம் பக்கம் பார்க்க

# தீ காயத்துடன் மாணவி அனுமதி

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான பாடசாலை மாணவி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம்

23ஆம் பக்கம் பார்க்க

# கடற்படை வாகனம் மோதி பாடசாலை மாணவி மரணம்

## நாரந்தனையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கடற்படையின் வாகனம் மோதி பாடசாலை சென்றுகொண்டிருந்த மாணவி பரி

23ஆம் பக்கம் பார்க்க





# விடாது விரட்டும் மழை தவிக்கிறது தமிழகம்!

## 50 இலட்சம் மக்கள் பாதிப்பு



(சென்னை)

தமிழகத்தில் வரலாறு காணாத வகையில் பெய்த மழையினால் சுமார் 50 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் பெய்து வரும் மழையினால் நேற்று வரை 300ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.


அடுத்த 48 மணித்தியாலங்களில மழை ஓரளவு குறைவடையும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

கடலூர் மற்றும் தஞ்சாவூர் மற

23ஆம் பக்கம் பார்க்க

# தமிழக உறவுகளுக்காக பிரார்த்திக்கின்றோம்

## முதலமைச்சர் அறிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழக உறவுகள் அவல வாழ்வில் இருந்து விடுபடப் பிரார்த்திக்கின்றோம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

23ஆம் பக்கம் பார்க்க

## தேவை

இரண்டு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீட்டில் வேலை செய்வதற்கு ஒரு பெண் வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு - 077 7707465
(2670)


# மோட்டார் குண்டு மீட்பு

(பருத்தித்துறை) வல்வெட்டித்துறை உரிக்காட்டுப் பகுதியில் உள்ள வெற்றுக்காணியிலிருந்து மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுஒருமணியளவில் குறித்த காணியை துப்புரவு செய்யும் போது மர்மபொருள் ஒன்று இருப்பதை அறிந்த காணி உரிமையாளரும் பொது மக்களும் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

சம்பவஇடத்துக்கு விரைந்த பொலிஸார் வெற்றுக் காணியிலிருந்த மர்ம பொருள் மோட்டார் குண்டு என்பதனை உறுதி செய்தனர்.

மீட்கப்பட்ட குண்டை பொலிஸார் மற்றும் குண்டு செயலிழக்கும் பிரிவினர்இணைந்து செயலிழக்கச் செய்தனர். (ஏ-12,60)


## காரைநகர் சைவமகாசபை பொதுக்கூட்டம் - 2015

காரைநகர் சைவமகாசபையின் புனருத்தாரண பொதுக்கூட்டம் எதிர்வரும் 19.12.2015 சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு காரைநகர் பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தே.பாபு
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
காரைநகர்.

04-12-2015 (C-2887)

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 தொடக்கம் O/L வரை கணிதமும் 10ம் 11ம் வகுப்புக்கான **வணிகக்கல்வியும் கணக்கீடும்**
அனுபவமிக்க ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்
தொடர்புகளுக்கு - 077-6452622 (2651)

## காணி விற்பனைக்கு

K.K.S றோட் ரொட்டியாலடி சுன்னாகத்தில் 3 1/2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு
தொடர்பு:- 0773927132 (2672)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## யாழ் YMCAயின் 125ஆவது ஆண்டுக்கான நன்றி செலுத்தும் வழிபாடு

YMCA JAFFNA ESTD : 1890

**காலம்**
05.12.2015 (இன்று)

**நேரம்**
மாலை 3.30 மணிக்கு

**இடம்**
யாழ் **YMCA**யில் இருந்து ஊர்வலமாக புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்துக்கு புறப்பட்டு 4.00 மணிக்கு வழிபாடு ஆரம்பமாகும்.

**அருளுரை**
ஆயர் அதி வண கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகளார். ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை யாழ்ப்பாணம்.

அனைவரையும் இவ்வழிபாட்டில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள், பொதுச் செயலாளர், அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்கள் YMCA யாழ்ப்பாணம்.** (C-2890)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
# வெளிவாரிப் பரீட்சை

**கலைமாணித் தேர்வு பகுதி - I - 2012 (பொது/சிறப்பு) (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 18.12.2015 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 09.01.2016 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 14.12.2015 (திங்கட்கிழமை) தொடக்கம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
02.12.2015 (C-2882)

# YOGIS
**INSTITUTE OF BEAUTY THERAPY HAIR DRESSING & HOME SCIENCE (pvt) Ltd.**

பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாட்கள் மட்டும்
2015 December 12th, 13th, 14th திகதிகளில் காலை 10 மணி முதல் ஆரம்பம்.
இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும், செய்யக்கூடிய 5 கேக் வகைகள், 5 பேஸ்ரி வகைகள் ( Pastries), 5 Sweets வகைகள்

**வகுப்புக்களில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.** (C-2862)

**T. Phone:**
**0212222796**
**0777164923**
**75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.**

## காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான நுழைவாயில் கோபுர திருக்குட நன்னீராட்டு விழா



**காலம்:-** 06/12/2015 ஞாயிற்றுக்கிழமை 9.18 மணிமுதல் 11.24 மணிவரை

**இடம்:-** ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்

பிரதம சிவாச்சாரியார் :-
சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள்

**நுழைவாயிற் கோபுர அனுசரணை**
திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன்
கோவளம், காரைநகர்

**குறிப்பு :**

★ **பகலில் அடியவர்களுக்கு மாணிக்கவாசகர் மடாலயத்தில் அன்னதான நிகழ்வு இடம்பெறும்.**

★ **நிகழ்வுகளை காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை நேரலையாக** karainagar.co, karainews.com **இணையதளங்களில் பார்வையிடலாம்.**

**இவ்வண்ணம்**
**ஆதீன கர்த்தாக்கள்**
**ஆ.அம்பலவிமுருகன்**
**மு.சுந்தரலிங்கம்**
(C-2886)

# கண்ணீர் அஞ்சலி
## மாணிக்கம் அன்பு

அச்சுவேலி தெற்கு
வாழ்வின் எழுச்சி உத்தியோகஸ்தர்
**திரு.மா. சந்திரசேகரம்**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **மாணிக்கம் அன்பு**
அவர்கள் மரணமடைந்த செய்தி கேட்டு துயர் அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். (C-2891)

பாரதி லேன்,
நாயன்மார்கட்டு.


இ.மயில்வாகனம்
சமாதான நீதவான்

# லஞ்சம் மற்றும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

## யாழில் நேற்று விழிப்புணர்வு செயற்றிட்டம்


(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரில் நேற்றைய தினம் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் எனும் தொனிப்பொருளில் மக்களுக்கு விளக்கமளிக்கும் செயற்றிட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இச்செயற்றிட்டத்தில் இலஞ்ச ஊழல் எதிர்ப்பு குழுவின் ஆணையாளர் நாயகம் டயஸ் விக்கிரமசிங்க, தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபேயின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.**





(படங்கள்:-உ.சாளின்)





நேற்று வெள்ளிக்கிழமை இலஞ்ச ஊழல் எதிர்ப்பு தினமாகும். இதனை முன்னிட்டே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலஞ்சம் வாங்குவதால் அல்லது கொடுப்பதால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து மக்களுக்கான தெளிவுபடுத்தல்களும் இடம்பெற்று இருந்தன.


மேலும் இலஞ்ச ஊழல் தொடர்பான விழிப்புணர்வை அனைத்து மக்களிடமும் ஏற்படுத்தும் வகையில் வாகனங்களுக்கு இவை தொடர்பிலான விழிப்புணர்வு வாசகங்களடங்கிய ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வும் நடைபெற்று இருந்தன. மக்கள் மத்தியில் இலஞ்ச ஆணைக் குழுவில் எவ்வாறு முறைப்பாட்டினை மேற்கொள்ளல் போன்றவை தொடர்பிலும் கபேயினாலும், இலஞ்ச ஊழல் எதிர்ப்பு ஆணைக் குழுவினாலும் விளக்கமளிக்கப்பட்டிருந்தன.

நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.நகரில் ஆரம்பமாகிய இச்செயற்றிட்டத்தின் போது அரச போக்குவரத்து பேருந்துகள் மற்றும் ஆட்டோக்கள் என்பவற்றுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. இதன் போது யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ். பொலிஸ் நிலைய பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# நீதித்துறைப் பிரச்சினைகளைத் தீர்க்க நிபுணர்களின் ஆலோசனை வேண்டும்

## ஜனாதிபதி வேண்டுகோள்

நீதித்துறையில் தீர்வைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படுகின்ற தாமதத்தை குறைப்பதற்கு நிபுணர்கள் ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பொதுமக்கள் நீதித்துறை சார்பான விடயங்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்கின்ற போது, முயற்சி செய்த நபருக்குப் பின்னர் உள்ள இரண்டாவது அல்லது மூன்றாவது தலைமுறையினரே அந்த தீர்வைப் பெற்றுக்கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இது சட்டத்துறையில் உள்ள பிரச்சினையல்ல என்பதோடு சமூகத்தில் உள்ள பிரச்சினை என்பதால் சட்டத்துறை நிபுணர்கள் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

பொதுமகன் ஒருவர் நீதியைப் பெற்றுக்கொள்வதற்காக செல்கின்ற போது அது நுகர்வுப் பொருளாக மாறியிருக்கின்றமை வறுமைக் கோட்டின கீழ் உள்ள மக்களுக்கு பெரும் சிரமத்தை கொடுப்பதாக ஜனாதிபதி எடுத்துக்கூறியுள்ளார். (இ-7-10)

## தாக்குதல் எதிரொலி

# 160 பள்ளிவாசல்கள் பிரான்ஸில் மூடப்படும்

பிரான்ஸிலுள்ள சுமார் 160 பள்ளிவாசல்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் பாரீஸில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடிப்படைவாத, தீவிரவாதக் கருத்துக்களையும் வெறுப்பையும் பரப்பும் பள்ளிவாசல்களும் அனுமதி பெறாத பள்ளிவாசல்களுமே இவ்வாறு மூடப்படவுள்ளன.

பிரான்ஸிலுள்ள பள்ளிவாசல்களுக்கான இமாம்களை நியமிக்கும் பொறுப்பு வகிக்கும் ஹஸன் எல் அலோவுய், இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் பிரான்ஸ் உள்விவகார அமைச்சுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருவதாகவும், உத்தியோகபூர்வ தகவல்களின் அடிப்படையில், 100 தொடக்கம் 160 வரையிலான பள்ளிவாசல்களை மூடுவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய முஸ்லிம்களை மத வெறுப்பாளர்கள் எனக் குற்றஞ் சாட்டும் நடவடிக்கை பிரான்ஸில் அதிகரித்துள்ளதோடு, பிரிவினைக்கும் பாகுபாட்டுக்குமாகப் பயன்படுத்தப்படுகிறது.

"இவ்வாறான பேச்சுகள், இஸ்லாமிய நாடுகளில் கூட அனுமதிக்கப்படக்கூடாது. பிரான்ஸ் போன்ற மதச்சார்பற்ற நாடுகளைப் பற்றித் தெரிவிக்கவே தேவையில்லை" என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளின் மூலம் 3 பள்ளிவாசல்களை ஏற்கனவே மூடியுள்ளதாகவும், அவை மூடப்படும்போது, றிவோல்வர்கள், ஜிஹாதி ஆவணங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## அரசியலமைப்பு வரைவுக்கான

# அமைச்சரவை உப குழுவில் 4 தமிழ்பேசும் அமைச்சர்கள்

(கொழும்பு)

இலங்கையின் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான அமைச்சரவை உப குழுவில், இரண்டு தமிழ் அமைச்சர்களும், இரு முஸ்லிம் அமைச்சர்களுமாக, 4 தமிழ்பேசும் அமைச்சர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த அமைச்சரவை உப குழுவை நியமித்துள்ளார்.

இதில் அமைச்சர்கள் டி.எம். சுவாமிநாதன் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இடம்பெற்றுள்ளனர்.

முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-7-10)

## 50 சடலங்கள் மீட்பு

சென்னை நகர மக்களைப் பெருந்துயரில் ஆழ்த்தியுள்ள வெள்ளம் நேற்று சற்று வடியத் தொடங்கியுள்ள நிலையில், வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. நேற்று காலை ராயப்பேட்டை அரசு வைத்தியசாலைக்கு மொத்தம் 50 சடலங்கள் கொண்டு வரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் 35 சடலங்கள் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் என்றும், இவை வெள்ளம் வடிந்த நிலையிலும், ஆங்காங்கே வெள்ளத்தில் மிதந்து வந்த போதும் மீட்கப்பட்டவை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ஆந்திராவில் மழைக்கு 81 பேர் பலி ஆறு மாவட்டங்களில் கடும் பாதிப்பு

சென்னையை புரட்டிபோட்ட மழை ஆந்திராவையும் விட்டு வைக்கவில்லை. ஆந்திர மாநிலத்தில் சித்தூர், நெல்லூர், பிரகாசம், கடப்பா, கர்னூல், குண்டூர் ஆகிய 6 மாவட்டங்களில் கடந்த 25 நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது.

மழை சேதம் குறித்து ஆந்திர துணை முதலமைச்சர் சின்னராஜப்பா நிருபர்களிடம் கூறியதாவது,

அண்மையில் பெய்த தொடர் மழை காரணமாக ஆந்திராவில் இது வரை 81 பேர் பலியாகி உள்ளனர். ரூ.6,750 கோடிவரை பயிர் நட்டம் ஏற்பட்டுள்ளது.

மேலும் சாலை மராமத்து மின்சாரம் உபகரணங்கள் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்காக மத்திய அரசிடம் ரூ.4 ஆயிரம் கோடி நிதி உதவி கோரப்பட்டு உள்ளது.

சென்னையில், வெள்ள பாதிப்பு கவலை அளிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜடேஜாவின் மயாஜால சுழலில்

# தென்னாபிரிக்கா தடுமாற்றம்

# தொடரும் இந்தியாவின் ஆதிக்கம்



### ரகானே சதம்

ரகானேயின் சதத்தின் உதவியுடன் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4-வது டெஸ்ட் போட்டியின் 2-ம் நாள் ஆட்ட நேரமுடிவில் இந்திய அணி வலுவான நிலையில் உள்ளது.

இந்திய - தெனனாபிரிக்க அணிகளுக்கிடையிலான கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டெல்லியில் நடைபெற்று வருகிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய இந்திய அணி ரகானேயின் பொறுப்பான ஆட்டத்தால் முதல் இன்னிங்சில் 334 ஓட்டங்கள் சேர்த்தது.

இந்திய மண்ணில் முதல் சதத்தை பதிவு செய்த ரகானே 127 ஓட்டங்கள் விளாசினார். அஸ்வின் 56 ஓட்டங்கள் சேர்த்தார். தவான் 33 ஓட்டங்களும், ஹோலி 44 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு இந்திய பந்துவீச்சாளர்கள் கடும் நெருக்கடியை ஏற்படுத்தினர்.


குறிப்பாக ஜடேஜாவின் பந்து வீச்சில் முன்னணி துடுப்பாட்டக்காரர்கள் விக்கெட்டை இழந்தனர்.

இதனால், தென் னாபிரிக்க அணி முதல் இன்னிங்சில் 121 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

அதிகபட்சமாக டி வில்லியர்ஸ் 42 ஓட்டங்கள் சேர்த்தார். பவுமா 22 ஓட்டங்களும், எல்கர் 17 ஓட்டங்களும், விலாஸ் 11 ஓட்டங்களும் எடுத்தனர். மற்றைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இந்தியா தரப்பில் ஜடேஜா 5 விக்கெட்டுகளை சாய்த்தார். அஸ்வின், உமேஷ் யாதவ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டு களும், இஷாந்த் சர்மா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

இதையடுத்து இந்தியா 213 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை இன்று தொடங்குகிறது. (க)



## இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து டெல்லி - கேரளா ஆட்டம் சமநிலை



8 அணிகள் இடையிலான 2-வது இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து (ஐ.எஸ்.எல்.) தொடர் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த போட்டி விறுவிறுப்பான இறுதி கட்டத்தை நெருங்கி இருக்கிறது.

இதில் கொல்கத்தா, கோவா, டெல்லி அணிகள் அரை இறுதி வாய்ப்பை உறுதி செய்து விட்டன. அரை இறுதியில் எஞ்சிய ஒரு இடத்தை பிடிக்க கவுகாத்தி, சென்னை அணிகள் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

இந்த நிலையில் டெல்லியில் நேற்று முன்தினம் இரவு நடந்த 53-வது லீக் ஆட் டத்தில் டெல்லி டைனமோஸ் - கேரளா பிளாஸ்டர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் தொடக்கம் முதலே ஆக்ரோஷமாக மோதின.

டெல்லி அணி 7-வது நிமிடத்தில்முதல்கோலை அடித்தது. இதனை அந்த அணியின் சான்டோஸ் (பிரேசில்) அடித்தார். 9-வது நிமிடத்தில் கேரளா அணி வீரர் டக்னல் (இங்கிலாந்து) பதில் கோலை திருப்பினார்.

கேரளா அணி வீரர்கள் கோம்ப்ரா (போர்ச்சுகல்) 30-வது நிமிடத்திலும், அன்டோனியா ஜெர்மன் (இங்கிலாந்து) 39-வது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

இதனால் கேரளா அணி 3-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. 40-வது நிமிடத்தில் டெல்லி அணி 2-வது கோல் அடித்தது.

அந்த அணியின் அடில் நபி (இங்கிலாந்து) இந்த கோலை அடித்தார். கடைசி நிமிடத்தில் டெல்லி அணி வீரர் செண்ணாஜ் 3-வது கோலை அடித்தார்.

அதன் பிறகு இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் இந்த ஆட்டம் 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. (க)

## தமிழக மக்களுக்கு சங்கா, முரளி நிதி உதவி



தமிழகத்தில்வரலாறு காணாத கனமழையினால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் எமது தொப்புள்கொடி உறவுகள் இதுவரை சுமார் 300 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் 50 லட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். தமிழக மக்களுக்கு அவசர உதவிகளுக்கு பலதரப்புக்கள் உதவி செய்துவரும் நிலையில் இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார 10 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கியுள்ளார், அத்துடன் தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளி தரன் ஒரு கோடி ரூபாய் பணம் கொடுத்து உதவி செய்துள்ளார். (க)

# வீட்டுத் திட்டத்தில் பாலியல் லஞ்சம் கோரிய குற்றச்சாட்டு பொய்யானது

(கொழும்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் பெண்களிடம் பாலியல் ரீதியான விருப்பங்களை எதிர்ப்பார்த்தார் என்ற குற்றச்சாட்டு பொய்யானது என்று இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்திய ராஜசபாவில் இந்த விடயம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இலங்கையின் வடக்கில் மேற்கொள்ளப்படும் இந்திய வீட்டுத்திட்டத்தின் போது வீடுகளை பெற்றுக்கொள்வதற்காக இவ்வாறு பாலியல் இலஞ்சம் கோரியதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடு அடிப்படையற்றது என்று நேற்று முன்தினம் இந்திய பிரதி வெளியுறவு அமைச்சர் வீ.கே.சிங் ராஜசபாவில் அறிவித்தார்.

இது தொடர்பான விசாரணை கடந்த ஒக்டோபரில் முடிவடைந்தது.

இந்த நிலையில் விசாரணையின் அறிக்கை இலங்கையின் சட்டம் ஒழுங்குத் துறை அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

(இ-7-10)

# முகாமைத்துவ கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 வயதை பூர்த்தி செய்தவராக இருப்பதுடன் க.பொ.த. சாதாரண தரத்தில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தினை எதிர்வரும் 02.01.2016 இற்கு முன் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

இக்கற்கை நெறி யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திலும் 155 ஆம் மைல் கல் கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் நடத்தப்படும். மேலதிக விபரங்களை மேற்படி கற்கை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)

# கண்ணீர் அஞ்சலி



(2668)

## வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

தோற்றம் 07.03.1931

மறைவு 03.12.2015

சிறி முத்துமாரியம்மன் ரேடர்ஸ் உரிமையாளர்களாகிய சி.நாகராசா, சி.சிவயோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவா ரேடிங் கம்பனி (கொழும்பு, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்) ஆகியவற்றின் உரிமையாளர் வை.சிவராசாவின் பாசமிகு மாமனாரும் ஆகிய திரு .வே.சின்னத்தம்பி அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தாருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## உரிமையாளர்களும் ஊழியர்களும்

ரூபன் பல்பொருள் வாணிபம்
அளவெட்டி.
077 288 7617

சண்முகம் அன்சன்ஸ்
A9,வீதி, சாவகச்சேரி.
077 076 1341

அம்பாள் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை.
077 836 0134

கதிர்காமசிங்கம் அன்சன்ஸ்
அளவெட்டி
077 711 1407

ஈசன் களஞ்சியம்
A9 வீதி, சாவகச்சேரி.
077 306 8974

குமாரி ஸ்ரோர்ஸ்,
பருத்தித்துறை.
077 482 2038

# ராசி பலன்

05.12.2015

(கார்த்திகை 19 சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.09மணிக்கு,
நவமி காலை 6.51 மணிவரை
உத்தரம் பிற்பகல் 2.18 மணிவரை
இராகுகாலம்-9.16-10.46 மணிவரை
சுபநேரம்- 3.16-4.46 மணிவரை
மெய்ப் பொருளாளர் குரு பூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம்,சதயம் | | |
| | | | குரு |
| | சூரி சனி | சுக் | ராகு சந் செவ் |

**மேடம்** கலகலப்பான செய்திகள் காலை நேரத்திலேயே வந்து சேரலாம். செய்தொழில் மேன்மையுண்டு. எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்** மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள். பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள். கனவுகள் நனவாக கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும். பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம். சுபசெலவுகள் கூடும் நாள்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு. தொழில் முயற்சிகளில் உத்வேகம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள். நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும். பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள். கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள். மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள். பணப் புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள். தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்** புதிய பொருட் சேர்க்கையுண்டு. குடும்பத்தில் குதூலம் அதிகரிக்கும் நாள். பொது நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம். கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீகள். உதிரி வருமானங்கள் வந்து சேரலாம். உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.


**மகரம்** உங்களின் திறமைக்குப் பாரா ட்டுக்கள் கிடைக்கும். வழிபாட் டால் வளம் காண வேண்டிய நாள். அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்** நீங்கள் நல்லவர் என நினைத் ஒருவரே உங்களுக்கு விரோதமா செயற்படலாம். மருத்துவ செலவுகள் கூடும் நாள். நித னத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.


**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு. சொந்த பந்தங்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள். தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.











2015ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த சித்தியடைந்த மாணவர்களுக்கான சாதனையாளர் கௌரவிப்பு விழா நேற்றைய தினம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளை சேர்ந்த 545 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக லயன் கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா, உ.சாளின்)


தென்மராட்சி கல்வி வலயத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான இலவச பாடநூல் விநியோகம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்லூரியின் முதல்வர் ந.ஜெயக்குமார் தலைமையில் காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து கொண்டு மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி வ.நடராசா கலந்து கொண்டு மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை வழங்கி மாணவர்களை கௌரவப்படுத்தினார். இலவச பாடநூல்களை வழங்கும் நாடுகளில் இலங்கை முக்கியமான பங்கை வகிக்கிறது. மாணவர்களின் கற்றல் மேம்பாட்டை விருத்தி செய்யும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் தீவகக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப பாளருமாகிய இ.குணநாதன அகவை அறுபது எய்தி பணியோய்வு காண் பதையொட்டி நீர்வைச் சமூகத்தினர் முன்னெடுத்த மணிவிழா கடந்த புதன் கிழமை மாலை 2 மணிக்கு நீர்வேலி திருமுருகன் மணிமண்டபத்தில் நடை பெற்றது. அச்செமு மக்கள் சார்பில் ஔசித்தியார் (உயர்தகுதி பொருந் தியவர்) என்ற கௌரவப்பட்டமும் வழங்கப்பட்டது.

நிகழ்வு சிறப்புற மிகப்பெரும் அனு சரணையை விழா நாயகரின் கனடா அன்பர்கள் குணநாதம் என்ற மணி விழா மலருக்கு (230 பக்கங்கள்) அனுசரணை வழங்கியும் லண் டன் நீர்வேலி நலன்புரிச்சங்கம் மற்றும் நீர்வேலி அத்தியார் பழைய மாணவர் சங்கம லண்டன கிளை. மற்றும் சுவிஸ நற்பணி மன்றம் என் பன விழாவிற்கு அனுசரணை வழங் கியும் சிறப்பித்திருந்தனர். மேலும் விழா வையொட்டி தாமாகவே முன் வந்து நீர்வேலிவாழ் அன்பர்களும் பங்களி ப்புக்களை நல்கியிருந்தனர்.

# JAFFNA COLLEGE

Cordially Invites you & your friends to its

Christmas Carol Service

**"Reindeer's Bells"**

on sunday 06th December 2015

at

4.00 p.m

at

The Cathedral, Vaddukoddai

(2642) **principal**

## மலிவு விற்பனை

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு லைடன் புடைவை நிலையத்தில் சகல விதமான பொருட்களுக்கும் 05.12.2015 முதல் 01.01.2016 வரை விசேட விலைக்கழிவு வழங்கப்படும். அத்தோடு பெண்கள், ஆண்களுக்கான பாடசாலைச் சீருடைத் துணி வகைகளுக்கும் கழிவு வழங்கப்படும். கணக்குகள் பதிவதற்கு ஆங்கிலம் தெரிந்த பெண் வேலையாள் தேவை.(நேரில் சமுகம் தரவும்)

**லைடன் புடைவை நிலையம்,**
**410 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
(2863) **021 222 2381**

## வகுப்பு

தரம் 6 முதல் O/L வரை கணித வகுப்பு வீடு வந்து கற்பிக்கப்படும்.

(2631) **தொடர்புகளுக்கு:**
**077 817 5794**

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரசசட்டவாதி பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரி 22 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களம், த. பெ. இல. 502,கொழும்பு 12 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை நேற்றைய தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

## யா/ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை

**136 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்**

காலம் : 05.12.2015 இன்று சனிக்கிழமை
நேரம் : காலை 9 மணி
இடம் : பாடசாலை பிரதான அரங்கு

தலைவர்
திரு.தி.இரவீந்திரநாதன் அவர்கள்
(பாடசாலை முதல்வர்)

பிரதம விருந்தினர்
திரு. சீ.வீ.கே.சிவஞானம் (ACIS,JP) அவர்கள்
(அவைத் தலைவர் ,வடக்கு மாகாண சபை)

சிறப்பு விருந்தினர்
திரு.இராமநாதன் குணநாதன் அவர்கள்
(ஓய்வு நிலை,தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

கௌரவ விருந்தினர்
திரு.அ.கிருபாகரன் அவர்கள்
(முதல்வர், கிருபா லேணர்ஸ், யாழ்ப்பாணம்)

ஆசியுரை
சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் அவர்கள்
(பிரதம குரு, செல்லக் கதிர்காம தேவஸ்தானம், நீர்வேலி)

அனைவரையும் அன்புடன்
(2853) அழைக்கின்றோம்
**பாடசாலைச் சமூகம்.**

## கலாபூஷணம். திரு.எல்.திலகநாயகம் போல்



அவர்களின் 6ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக நல்லூர் சோமராகம் இசை மன்றம் நடாத்தும்

**திலகார்ப்பணம்**

காலம்:05.12.2015 இன்று சனிக்கிழமை
இடம்: ஸ்ரீ.ஸ்ரீ.ராகவேந்திர ஸ்வாமிகள் மிருத்திகா பிருந்தாவனம்
நேரம்:பி.ப.3மணி

பிரதம விருந்தினர்
சங்கீத பூஷணம் திரு.எஸ்.சிவஞானசேகரம் அவர்கள்
(ஓய்வுபெற்ற சென்.ஜோண்ஸ் கல்லூரி இசை ஆசிரியர்)
கௌரவ விருந்தினர் சங்கீத பூஷணம் திரு.எஸ் பாலசிங்கம் அவர்கள்
(மூத்த இசைக்கலைஞரும், இசை ஆசிரியரும்)

(சி-2860)

## வாடகைக்கு

அரச பணி புரியும் பெண்களுக்கு நல்லூர் பகுதியில் சமையல் அறை வசதியுடன் கூடிய அறை வாடகைக்கு உண்டு. முற்பணம் எதிர்பார்க்கப்படும். (2658)

தொடர்புகளுக்கு: 071 462 0806





மென்டலின் சிவகுமாரின்
**"லலித ஷேத்ரா"**
இரண்டாம் ஆண்டு விழாவை முன்னிட்டு,
இசை உலகின் முதல் கட வித்துவாம்சினி

**திருமதி.சுகன்யா ராம்கோபால்**

முதன் முறையாக நமது தாய் மண்ணில்
கானமும் லயமும் கடங்கள் பத்தில் சங்கமிக்க வழங்கும்

**"லய ராக சமர்ப்பணம்"**
(கட தரங்)





**கொழும்பு**

இடம் - புதிய கதிரேசன் மண்டபம், பம்பலப்பிட்டி.
காலம் - 05.12.2015.
நேரம் - மாலை 6.00 மணி.





**யாழ்ப்பாணம்**

இடம் - செல்வமஹால் மண்டபம், பூநாறி மடத்தடி, யாழ்ப்பாணம்.
காலம் - 07.12.2015.
நேரம் - மாலை 5.00 மணி





அனுமதி இலவசம்

தொடர்புகளுக்கு - 0774486961, 0772798497

ஊடக அனுசரணை: VIRAKESARI வீரகேசரி THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA, சக்தி TV, சக்தி FM

இணை அனுசரணை: Chelva, ANDRA WEDDING CARDS, Sapthami Pro-Music & Recording Studio, MqcMix, JEYECHANDRANS, eestee TRAVELS, GOKUL, HOTEL EUROLANKA (PVT) LTD., SKYLARR, வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா:56 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L பிரான்ஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/2371 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 52 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSC/தனியார் தொழில்<br>தொ.இ: G/3303 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 16 செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L, NCT/ அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/3369 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 61 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/3305 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 18 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/3387 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 32 செவ் 8 இல்<br>உயரம்: 162CM<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: G/3314 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 16 உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: லண்டன் குடியுரிமை<br>தொ.இ: B/3389 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 15<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்<br>தொ.இ: G/3324 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# தமிழகத்தில் வெள்ள அனர்த்தத்தினால் தவிக்கும் எமது உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்

## வவுனியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கம் அழைப்பு

(குருமன்காடு)

இயற்கையின் சீற்றத்தால் மூழ்கிக கிடக்கும் தமிழ் நாட்டின் சென்னை உட்பட்ட பல நகரங்களில் வாழும் மக்கள் அன்றாட செயற்பாடுகளுக்கு சொல்லொணா துன்பங்களை அனுபவிக்கும் மக்களுக்கு உதவவுள்ளதாக வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது மக்கள் பல்வேறு இன்னலகளுக்கு முகம் கொடுக்கும் போதேலலாம் குரல் கொடுக்க யாருமற்றிருக்கையில் தம்மை ஆகுதியாக்கியும் போராட்டங்களை நடத்தியும் இலங்கையின் வடபால் நடந்த கோரத்திற்கு முகவரி தேடிக்கொடுத்த பலர் இன்று இயற்கையின் சீற்றத்தால் இனனல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந் நிலையில் இலங்கை வாழ் தமிழர்களாகிய தொப்புள் கொடி உறவு என பேச்சுக்கு அறிக்கை விட்டவர்களாக அல்லாமல் நாமாக அம மக்களுக்கு உதவ வேண்டியது தலையாய கடமையாக காணபபடுவதை யாரும் மறுப்பதற்கில்லை.

எனவே அவசரமானதும் அவசியமானதுமான உதவியை வழங்கும் செயற்பாடாக நீண்ட காலத்திற்கு பழுதடையாத உலர் உணவுகள் மற்றும் புதிய உடைகளை கோரி நிற்கின்றோம்.

ஆகவே அரசியல் வாதிகள், அரசியல் கட்சிகள், வவுனியா வர்த்தகா சங்கம், வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியம், பொது அமைப்புகள், வர்த்தகர்கள், பொது மக்கள், சமூக ஆர்வலர்களிடம் இருந்து உதவிகளை எதிர்பார்ப்பதுடன் பொருட்களை வவுனியா குருமன்காடுச் சந்தியில் அமைந்துள்ள வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும. அத்துடன் அலுவலகத்தில் ஒப்படைக்க முடியாதவர்கள் அறிவிக்கும் பட்சத்தில் அவர்களது முகவரிகளில வந்தே பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மேலதிக தொடர்புகளுக்கு 077 226 0469, 077 655 0632, 077 628 8923, 077 756 2497, 077 498 8519 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




# கவிதை தொகுப்பு நூல் வெளியீடு

(மன்னார்)

மன்னார் பெனிலின் ஆக்கத்தில் உருவான ஈரநிலத்தை எதிர்பார்த்து எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியில் மன்னார் தமிழ்ச்சங்கத்தலைவர் மஹா.ஸ்ரீ.தர்மகுமார் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

கவிதை நூல் வெளியீட்டு நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ். வசந்தகுமார், மன்னார் ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் ஜானப். எம்.எம்.ஷியான் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இக்கவிஞன் போரினால் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டு மாற்றுவலுவுடையோனாக வெளியிடும் இரண்டாவது கவிதைத் தொகுதி என்பது குறிப்பிடத்தக்க தாகும். (2-29)

# பொதுச்சபை கூட்டம்

(முள்ளியவளை)

முல்லை.மாவட் ஒருங்கிணைந்த பண்ணை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுச் சபை கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு 14ஆம் கட்டை ஒட்டுசுட்டானிலுள்ள மேற்படி சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இச்சங்கத்தலைவர் த.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

எனவே 03.06.2015 வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டதற்கு அமைய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(2)

# தண்ணீரில் தத்தளிக்கும் தமிழக உறவுகளின் பேரிடரை நீக்குவதற்கு உதவ முன்வாருங்கள்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் அழைப்பு

(குருமன்காடு)

தண்ணீரில் தத்தளிக்கும் தமிழக உறவுகளின் அவலம், எம்மைக கலங்க வைக்கிறது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். அதிர்ச்சி ஊட்டும்வகையில் அமைந்துள்ள இந்த இயற்கைப் பேரிடர், மற்றுமொரு மனிதப் பேரவலத்தை விளைவிக்கும் முன் சர்வதேசமும் சிறப்புக் கவனம் எடுத்து உதவ முன்வர வேண்டும் என்று கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்,

வரலாறு காணாத மழைப் பொழிவால் தமிழகத்தின் சென்னை, கடலூர், தூத்துக்குடி உள்ளிட்ட பல பகுதிகளும் தண்ணீரில் மிதக்கும் செய்தி அறிந்து கலங்கி நிற்கிறோம். இந்த மழைப் பொழிவின் தாக்கம் இங்கு எங்கள் மக்களையும் விட்டு வைக்காத நிலையில், தமிழகத்தில் இயற்கைப் பேரிடரின் எல்லை கடந்த தாக்கம் எம்மைக் கலங்க வைக்கிறது.

இது தொடர்பில் வெளிவரும் செய்திகள் அதிர்ச்சியூட்டும் வகையில் உள்ளன.

இந்த இயற்கைப் பேரிடர் ஒரு மாபெரும் மனிதப் பேரவலமாக மாறிவிடுமோ என வேதனையுற வைக்கிறது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில தமிழக தொப்புள் கொடி உறவுகளுடன் உணர்வால் இணைந்திருக்கிறோம்.

நிலைமை மேலும் மோசமாக முன், சர்வதேசம் இது தொடர்பில் சிறப்புக்கவனம் எடுத்து உதவ முன்வர வேண்டும் என்று கோருகிறேன். (2-250-281)

# வட மாகாண பாடசாலைகளின் அழகியல் பாட ஆசிரியர்களுக்கு நாளை பல்கலாசார விழா

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அழகியல் பாட ஆசிரியர்கள் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பாடசாலைகளின் அழகியல் பாட ஆசிரியர்கள் பங்கேற்கும் பல்கலாசார விழாவிற்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைகளில் அழகியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பல்கலாசார விழாவில் பங்கேற்பதற்குரிய ஒழுங்கமைப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)



கிளிநொச்சி பூநகரி பிரதேச கலாசார விழா நேற்று முன்தினம் பூநகரி பரமன்கிராய் அ.த.க.பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டிருந்தார். பிரதேச கலை கலாசாரங்களை எடுத்தியம்பும் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் தொல்பொருட்கள் சில பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டன. இன்றைய நிகழ்வில் மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெற்றது. (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# ஆடுகளை திருடிய நபர்களுக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிப்பு

(மல்லாவி)

ஏ-9வீதி மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல இடங்களிலும் வெள்ளைவான்மூலமும் ஆடுகளைத் திருடி கடத்திய கும்பலொன்றை மாங்குளம் பொலிஸார் கடந்த வாரம் சந்தேகத்தின் பேரில் நான்குபேரை கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபோது கடந்த 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதுவழக்கினைவிசாரணை செய்த நீதிபதி எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரை நான்கு சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.


இதேவேளை மேற்படி ஆடுகள் கடத்தியவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் மாங்குளம் பொலிஸார் ஆடுகளைக் களவு கொடுத்த பொதுமக்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்திலோ அல்லது தமக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-15)

# உயிரிழந்த கடலாமை மீட்பு

மன்னார், தாழ்வுபாட்டு கடற்கரையோரத்திலுள்ள மீன்வாடியொன்றில் சுமார் 50 கிலோகிராம் நிறை கொண்ட உயிரிழந்த கடல் ஆமையொன்றை மீட்டுள்ளதுடன், மேற்படி வாடியின் உரிமையாள ரை சந்தே கத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளதாக அம்மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி மீன்வாடியில் கடல் ஆமையொன்று பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதியிலுள்ள கடற்படையினருக்கு தகவல் கிடைதததது. இதைத் தொடர்ந்து வாடிக்குச் சென்ற கடற்படையினர், உயிரிழந்த ஆமையை மீட்டுள்ளதுடன், பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். இந்நிலையில், சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (2)

# ஆறுமுகநாவலர் நினைவு தினம்



வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம்,"கலை, இலக்கிய நண்பர்கள் வட்டம், தமிழ் விருட்சம் ஆகியன இணைந்து நடத்தும் ஆறுமுக நாவலர் நினைவு தினம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இலுப்பையடி சந்தியில் அமைந்துள்ள நாவலர் சிலை அடியில நடைபெறவுள்ளது. எனவே ஆர்வலர்கள் அனைவரையும கலந்து சிறப்பிக்குமாறு விழாக் குழுவினர் கேட்டுள்ளனர். (2)

# யுத்தத்தில் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(மல்லாவி)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் நிதியனுசரணையுடன் வெளிச்சம் அமைப்பின் ஏற்பாட்டில் துளிர்களுக்கு மழையாய் எனும் திட்டத்தின் இரண்டாம் கட்ட நிகழ்வாக நடைபெற்று முடிந்த யுத்தத்தில் பெற்றோரை இழந்த 100மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முள்ளியவளை மாமூலை பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு வெளிச்சம் அமைப்பின் தலைவர் சி.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வடக்கு மாகாண சபை உறுப் பினர் து.ரவிகரன் உட்பட கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டு வழங்கி வைக்கவுள்ளனர்.

வெளிச்சம் அமைப்பினால் கடந்த மாதம் 8ஆம் திகதி முள்ளியவளை கணுக்கேணியில் வைத்து பெற்றோரை இழந்த 50 மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி புதுக்குடியிருப்பில் நடமாடும் சேவை

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனமும் சிறுவர் நிதியமும் இணைந்து நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வலது குறைந்தோருக்கான நடமாட உதவும் உபகரணங்களை வழங்குதலும் செயற்கை அவயவங்களைத் திருத்தம் செய்தலும் புதிய அவயவங்களைப் பொருத்துவதற்கான அளவுகளை எடுத்தலும்போன்ற பணிகளை உள்ளடக்கிய இலவச நடமாடும் சேவையொன்று புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச செய லகப் பிரிவுக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் மேற்படி சேவையில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு பாக்டர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி கேட்டுள்ளார். (2-9-15)






சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்ற போது... (படங்கள்: கிளிநொச்சி-1 செய்தியாளர்)

# மீள்குடியேற்றம் குறித்து ஆராயும் கூட்டம்

# கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள மீள்குடியேற்றம் தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்று காலை வடக்கு மாகாண சுகாதார மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர். ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.அரியரத்தினம், சு.பசுபதிப்பிள்ளை, அஸ்மின் மற்றும் வை.தவநாதன், மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டு சமகால மீள்குடியேற்ற நிலைமைகள் தொடர்பில் மதிப்பீடு செய்தனர்.

இக்கலந்துரையாடலில், மீள் குடியேற்றம், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள், போக்குவரத்து, மின்சாரம், விவசாயம் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

வடக்கு மாகாண சபை மீள் குடியேற்றம் தொடர்பில் உள்வாங்கப்படவில்லை என்ற விடயத்தினை வடக்கு கிழக்கு முதலமைச்சாகள், அமைச்சர்கள், ஆளுநர்கள், மத்திய அரசின் அமைச்சர்கள், அரசாங்க அதிபர்களுடன் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டதாகவும், அதனடிப்படையில் மீள்குடியேற்றம் தொடர்பில் மத்திய, மாகாண அரசுகள் இணைந்து செயற்பட தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அந்தவகையில் மீள் குடியேற்றம், காணி அபகரிப்பு போன்ற விடயங்களை உள்ளடக்கி அறிக்கை ஒன்றினை சமர்ப்பிப்பதற்காக மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து மீள்குடியேற்ற கொள்கை அறிக்கை ஒன்றினை சமர்ப்பிப்பதற்காகவும் இவ்வாறு மாவட்டங்கள் தோறும் கூட்டங்கள் இடம் பெறுவதாகவும் தெரிவித்தார்.

அதனடிப்படையில் 5 மாவட்டங்களிலும் தரவுகள் திரட்டப்பட உள்ளதாகவும், இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்றம் மற்றும் அது சார்ந்த விடயங்களில உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய உள்ளதாக தெரிவித்தார்.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம், கிளிநொச்சி பளை பிரதேசத்தில் கருந்தாய் கிராமத்தில் 52 ஏக்கர் நிலம் 1976 ஆம் ஆண்டு மக்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும், குறித்த காணியை தென்னை அபிவிருத்தி சபை ஆக்கிரமிப்பு செய்து மக்களை வெளியேற்றியதாகவும் சுட்டிக்காட்டினார். இதற்கு பதிலளித்த அரசாங்க அதிபர், இவ்விடயம் தொடர்பில் அதிகாரிகளுடன் பேசியுள்ளதாகவும், சாதகமான பதில் கிடைக்கும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். தவநாதன், வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின்சாரம் வழங்கப்படும் திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்தார். குறித்த திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரம் பேருக்கு மாத்திரம் வழங்க உள்ளதாகவும் மிகுதி பேருக்கு இலகு கடன் திட்டம் மூலம் அமுல்படுத்த உள்ளதாக தெரிவித்த அவர், ஏனைய மக்களும் இலவச மின் இணைப்பினை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து கொடுக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

இதன்போது கல்வி அமைச்சர் த.குருகுலராஜா,

அனைவருக்கும் இலவச மின் இணைப்பினை பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என தெரிவித்ததுடன், வறுமையை ஒழிப்பதற்கு சர்வதேசம்



முயன்று வரும் நிலையில், இலங்கையில் 2030 வரை திட்டங்களை வைத்திருப்பது தொடர்பில் கேள்வி எழுவதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் கூறுகையில், 4 வருடங்களிற்குள் மீள் குடியேற்றம் தொடர்பிலான முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டமையால், தற்போதுள்ள அரசின் காலத்திற்குள் வடக்கின் வசந்தம் திட்டத்திற்கு வேறேதும் வழியில் நிதியினை பெற்று, மின் இணைப்புக்கள் வழங்குவது தொடர்பில் நடைமுறைப்படுத்தலாம் என தெரிவித்தார். வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கூறுகையில்,

பூநகரியில் 5 ஆயிரம் ஏக்கர் காணி இராணுவத்தினர் வசமுள்ள விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறும், பூநகரி வைத்தியசாலை காணி இராணுவத்தினரிடம் உள்ளமையையும், பதிலாக பிறிதொரு இடத்தில் வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் சுட்டிக்காட்டிய அவர், இவற்றை விட்டு வலிகாமத்தில் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை மாத்திரம் கேட்பதில் பயனில்லை என குறிப்பிட்டுக்காட்டினார.

அதன் பின்னர் சத்தியலிங்கம் கூறுகையில, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் அளவு, வீடுகள், பொது இடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் அறிக் கைகள் பிரதேச செயலகங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டார். (2-15)




# மன்னார் புகையிரத பிரதான வீதியிலுள்ள சிறிய பாலம் சீர் செய்யப்படவில்லை

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை



மன்னார் புகையிரத பிரதான வீதி சாந்திபுரம் பகுதியில் துண்டிக்கப்பட்டுள்ளதால் சாந்திபுரம், சவுத்பார் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மற்றும் புகையிரத பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதனால் புகையிரத பயணிகள் உட்பட அப்பகுதி கிராம மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர். கடந்த மாதம் நாடு பூராகவும் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தை அடுத்து மன்னாரில் ஏற்பட்ட கனமழை காரணமாக பல பகுதிகள் நீரில் மூழ்கியிருந்தன.

மன்னார் நகரப் பகுதியில் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் பல கிராமங்களிலும், அதேபோன்று சிறுகுளங்கள் உட்பட குட்டைகள், ஓடைகள் என்பன வெள்ளம் நிறைந்து வழிந்தோடியது. இதனால் ஏற்பட்ட வெள்ளம் பெருமளவில் எமில்நகர் சதுப்புநில பகுதியில் தேங்கியிருந்தது. தேங்கிய நீரை கடலுக்கு அனுப்புவதில் புகையிரத பிரதான பாதையில் அமைந்துள்ள சிறியரக பாலம் சாந்திபுரம் கிராமத்திற்கும் கடல்பகுதியையும் ஊடறுத்து செல்வதால் சாந்திபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட சிறியரக பாலத்தின் குழாய் மூலமே வெள்ள நீர் வெளியேற்றப்பட்டது.

இந்நிலையில் வெள்ளநீர் அதிகமாக காணப்பட்டதால் குறித்த வீதிக்கு அடியில் குறுக்காக அமைக்கப்பட்டிருந்த குழாயால் வெள்ள நீர் கடலுக்கு செல்வதில் தாமதம் ஏற்பட்டது. இதனை அடுத்து குறித்த குழாயினை அகற்றி புகையிரத வீதி துண்டிக்கப்பட்டது.

இதனால் அதிகமாக வெள்ள நீர் கடலுக்கு அனுப்பப்பட்டது. எனினும் மழை குறைவடைந்து இரு வாரங்கள் கடந்த நிலையில் குறித்த துண்டிக்கப்பட்ட சிறியரக பாலம் சீர் செய்யப்படாததால் மக்கள் வெளியிடங்களுக்கு செல்வதிலும் அதேபோன்று புகையிரத நிலையத்திற்கு செல்வதிலும் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வீதி துண்டிக்கப்பட்டுள்ளதால் வாகனங்கள் வேறு வழியாகவே சென்று வருகின்றன. இதனால் ஏற்படும் சிரமங்களை குறைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க தவறியுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் சம்பந்தமாக சம்பந்தபட்ட அதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, காலநிலை மாற்றம் இன்னும் சீராகவில்லை என்ற வகையில் குறித்த பாலம் சீர் செய்யப்படுவது தாமதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன் விரைவில் அது சீர்செய்யப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனினும் தற்காலிக பாலம் ஒன்றை அமைத்து தரும்படி குறித்த மக்கள் கோரியுள்ளனர்.

எனவே குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து குறித்த சிறிய ரக பாலத்தை சீர்செய்து தரும்படி வேண்டுகோள் விடுக்கின்றனர்.(2-250)

# மாற்றுவலுவுள்ள சிறார்களுக்கு உதவிப்பொருட்கள் வழங்கி வைப்பு

சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினம் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் பொன் விழா மண்டபத்தில் Child fund திட்ட முகாமையாளர் அகிலன் குரூஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் ப.சத்தியலிங்கம், கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மாற்றுவலுவுள்ளோர் தினம் தொடர்பில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரம், நாடகம், பேச்சு, விவாத அரங்கு ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற 200 வரையிலான மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்பட்டன.

அத்துடன் 8 பாடசாலைகளுக்கு விசேட கல்வி கற்பதற்கான கருவிகளும் மாற்றுவலுவுள்ள சிறார்களுக்கான உதவி உபகரணப் பொருட்களும் வழங்கப்பட்டன. (2-277)

# விண்ணப்பிக்காத அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

## பரீட்சைகள் ஆணையாளர்

மாணவர்களின் சார்பில் பரீட்சைக்கு விண்ணப்பிககாத அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.


கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றக் கூடிய தகுதியிருந்தும் சில அதிபர்கள் சில மாணவ, மாணவியரின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவில்லை என குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தகுதியுடைய மாணவர்களுக்காக விண்ணப்பம் செய்யாத அதிபர்கள், பரீட்சை நுழைவுச் சீட்டுகளை வழங்க மறுத்த அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும்.

இவ்வாறான அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரை செய்யத் தீர்மானித்துள்ளேன்.

பரீட்சைக்கு தோற்ற சந்தர்ப்பம் அளிக்கப்படாத அவ்வாறான மாணவர்களுக்கு இன்று நுழைவுச்சீட்டுக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிபரினால் விண்ணப்பம் செய்யப்படாத மாணவர்கள், நுழைவுச்சீட்டு கிடைக்காத மாணவர்கள் அது குறித்து 1911 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உடனடியாக அறிவிக்க முடியும் என பரீட்சை ஆணையாளர் புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (இ-7-10)




# நிஸங்க சேனாதிபதியை கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸாரின் உதவி நாடப்படும்

## ராஜித சேனாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

**அவன்கார்ட் ஆயுதக் கப்பல் தொடர்பான விசாரணைகளுக்கு சமுகமளிக்காமல் இருந்தால், நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதியை கைதுசெய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி நாடப்படும் என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.**



அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன இதனை தெரிவித்துள்ளார். இந்த கப்பல் தொடர்பில் தற்போது பாரிய ஊழல்களுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகிறது.

எனினும் மருத்துவ சிகிச்சை ஒன்றை வெளிநாட்டில் பெறுவதன காரணமாக சேனாதிபதிக்கு இந்த விசாரணையில் பங்கேற்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையிலேயே அவர் விசாரணையில் இருந்து தப்ப முயற்சித்தால் சர்வதேச பொலிஸாரின் உதவி நாடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை அவன்கார்ட் நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் உடன்படிக்கை எதிலும் கைச்சாத்திடவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7-10)

# இலங்கை நிதியுதவியை இன்னும் கோரவில்லை

## சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

நிதியுதவிகள் குறித்து இலங்கை அரசாங்கம் இன்னும் தமக்கு உத்தியோகபூர்வ கோரிக்கை எதனையும் முன்வைக்கவில்லை.

எனினும் இலங்கைக்கு உதவும் வழிகள் குறித்து ஆராய்வதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச பொருளாதாரத்தின் தாக்கம் காரணமாக இலங்கையின் பொருளாதாரமும் பாதிக்கப்படும்

இதன்போது சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கோரப்படும் என்று அண்மையில் பிரதமர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் இலங்கையின் தேவைகளுக்கு இணங்க உதவிசெய்ய தாம் எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்புகள் துறை பணிப்பாளர் ஜெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மகிந்த ராஜபகஷவின் காலத்தில் இலங்கை அரசாங்கம் கொடுப்பனவுகளை சீர்செய்வதற்காக 2.6 பில்லியன் ரூபாய்களை 2009 முதல 2011ஆம்ஆண்டு வரையான காலப்பகுதியில்பெறறமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# வெல்கமவினால் எனக்கு உயிர் அச்சுறுத்தல்

## மாரசிங்க எம்.பி.குற்றச்சாட்டு



முன்னைய ஆட்சியின் போது இலங்கை போக்குவரத்து சபைக்கு பேருந்து கொள்வனவு செய்யப்பட்டதில இடம்பெற்ற ஊழல்மோசடி தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றிமைக்காக முன்னைய அரசாங்கத்தின் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம எனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மாரசிங்க குற்றம் சுமத்தினார். இது தொடர்பில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொததாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கணடவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அங்கு அவர் மேலும்தெரிவிக்கையில்

முன்னைய ஆட்சியின் போது 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிதாக 2200 பேருந்துகளை இறக்குமதி செய்ததில் 286 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சன் ராமநாயக்க மற்றும் அசோக அபேசிங்க ஆகியோர் இலஞ்ச மற்றும் ஊழல்விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர்.

இந்த பேருந்து கொள்வனவில் பாரியளவில் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னாள் போக்குவரத்து அமைச்சர் என்ற வகையில் குமார வெல்கமவே பொறுப்புக் கூறவேண்டும்.

எனவே இது தொடர்பில் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்தேன். இது என்னுடைய கருத்து சுதந்திரமாகும். இருந்தபோதிலும என்னுடைய பாராளுமனற உரைக்கு எதிராக குமார வெல்கம எம்.பி. என்னை கொலை செய்யப்போவதாக அச்சுறுத்தினார்.

ஆகவே இது தொடர்பில் உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவேண்டும். மேலும் இந்த விடயத்தை நீதிமன்றம்வரைக்கும்கொண்டு செல்வேன் என்றார். (இ-7-10)

# ஜனாதிபதி செயலகத்தின் செலவீனங்கள் 1476 மில்லியன் ரூபாவினால் குறைப்பு

## பிரதமர் ரணில் தகவல்



ஜனாதிபதி செயலகத்தின் செலவீனங்கள் ஆயிரத்து 476 மில்லியன் ரூபாவினால் மீதப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2014ஆம் ஆண்டில் ஜனாதிபதி செயலகம் செலவழித்த தொகையை விடவும் 2015 ஆம் ஆண்டில் ஆயிரத்து 476மில்லியன் ரூபா குறைவாகவே செலவிடப்பட்டுள்ளது.

பாரியளவு தொகை மீதப்படுத்தப்பட்டுள்ளது, இதன் ஊடாகவே கடந்த அரசாங்கத்தினது தன்மையையும் தற்போதைய அரசாங்கத்தின் நிலைமையையும் புரிந்து கொள்ள முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்காக இந்த பணத்தை வழங்க முடியும்.

முக்கிய பிரபுகளுக்கான எயார் பேருந்துகள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட குழு நிலை விவாதங்களில் பங்கேற்ற போது நேற்று முன்தினம் இதனை பிரதமர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# டுபாய் மற்றும் சிங்கப்பூர் வங்கிகளிலுள்ள பணத்தை மீட்க சுவிட்சர்லாந்திடம் உதவி

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

முன்னைய ஆட்சியாளர்கள் டுபாய் மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் வங்கிகளில் வைப்புச் செய்துள்ள நிதியை மீட்பதற்கு சுவிட்சர்லாந்து நாட்டின் உதவியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல்திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

முன்னைய ஆட்சியாளர்கள் டுபாய் மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் வங்கிகளில் வைபபுச் செய்துள்ள நிதியை மீட்பதற்கு சுவிட்சர்லாந்து நாட்டின் உதவியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் அந்த நாட்டுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளப்படவுள்ளது. இந்த நடவடிக்கைக்கு அமைச்சரவையின் அங்காரம்கிடைத்துள்ளது என அவர் மேலும்தெரிவித்தார். (இ-7-10)

# நடிகர்கள் ரஜனி, விஜய்க்கு சொந்தமான திருமண மண்டபங்களில் மக்கள் தஞ்சம்



கோடம்பாக்கத்திலுள்ள நடிகர், ரஜனிகாந்தின் திருமண மண்டபம், சாலிகிராமத்திலுள்ள நடிகர் விஜய் திருமண மண்டபம் போன்றவை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படுவோர் பயன் பெறலாம். ரஜனிகாந்துக்கு சொந்தமான ராகவேந்திரா திருமண மண்டபம், கோடம்பாக்கம், விஸ்வநாதபுரம்பிரதான வீதியில் உள் ளது. விஜய்க்கு சொந்தமான, சோபா கல்யாண மண்டபம், சாலி கிராமம் பகுதியிலுள்ள அருணாச்சலம் சாலையிலுள்ளது. இந்த திருமண மண்டபங்கள் நேற்று முன்தினம் மதியம் முதலே திறந்துவிடப்பட்டு, மக்கள பாதுகாப்பாக தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உணவுக்கும ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில் நுட்பங்கள்–72

# உலக மண் வருடமும் உலக அவரைகள் வருடமும்!





பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இந்த ஆண்டு (2015) உலக மண்ணுக்கான ஆண்டாகும் (International Year of Soils). விரைந்துவரும் ஆண்டு (2016) உலகஅவரைகள் ஆண்டாகும் (International Year of Pulses). இது ஐக்கியநாடுகள் தாபனத்தின் உணவுற்பத்திக்கான நிறுவனமான உலக உணவு ஸ்தாபனத்தினால் அறிவிக்கப்பட்டதாகும். மண்ணுக்கும் அவரைக்கும் நிறையவே தொடர்பு உண்டு. மண்ணின் வளத்தை பாதுகாப்பதற்காகவும் அது பற்றிய விழிப்புணர்வைஏற்படுத்துவதற்காகவும் உலகமண் வருடம் அறிவிக்கப்பட்டு உலகெங்கும் அதுபற்றி பலவாறாக பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இங்கும் இதற்குமுக்கியத்துவமளித்து மாகாண விவசாய அமைச்சினால் இன்றைய தினம் ஒருகருத்தரங்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. மண்ணின் முக்கியத்துவத்தை பலவாறாகவிளக்கலாம். ஐம்பூதங்களான நிலம்,நீர்,காற்று, நெருப்பு, ஆகாயம் என்பவற்றுள் நிலத்தின் பங்குஅளப்பரியது. சுவரின்றி சித்திரமேது என்பதற்கிணங்க இப்பூமியில் உயிரினங்களின் செயற்பாட்டுக்கு நிலமும் அதனுடனிணைந்த அனைத்து பூதங்களின் பங்களிப்பும் அவசியமானது. இவையனைத்தும் இயற்கையின் வரப்பிரசாதங்களாகினும் அவ்வப்போது அவற்றின் விளையாட்டால் பல விபரீதங்களும் நடந்தேறி விடுகின்றன. நிலமசைந்தால். அதாவது பூமியிலுள்ள தட்டுக்கள் அசையும் போது அது நிலநடுக்கமாகி பலவித சேதங்களை உண்டு பண்ணி விடுகின்றது. இவற்றுக்கும் மேலாக இப்பூமியிலுள்ள மேற்படை மண்ணாக தாவரங்கள் வளரக்கூடிய பிரதேசமாக இருக்கின்றது. அதிலும் பலவிதமான வேறுபாடுகள். இருப்பினும் உயிர்கள் வாழ இவையனைத்தும் எமக்கான வரப்பிரசாதமாக இயற்கையின் அன்பளிப்பாகநாம் காணலாம். இயற்கை அன்பளிப்பாக தந்ததைநாம் எமக்குரியதாக உயிலும்உறுதியும் எழுதி விட்டு அதனைவிற்கும் பண்டமாக்கியிருக்கின்றோம். அன்பளிப்பாக கிடைத்ததை தேவையுடையவர்களுக்கு அன்பளிப்பாக கொடுக்கும் மனப்பக்குவம் எமக்குவர வேண்டும்.

எதிர்வரும் வருடம் உலக அவரைகளுக்கான ஆண்டாகும். மண்ணிலிருந்து தாவரத்திற்கு வந்திருக்கின்றார்கள். பலவகை தாவரங்களை நாம் வளர்க்கின்றோம் ஆனால் அவரைக்கு ஏன் இந்தகௌரவம் என நீங்கள் சற்றுயோசிக்கலாம். எமதுஉணவாக உட்கொள்ளப்படும் பயிர்வகைகளுள் தானியங்கள் முக்கியபங்கு வகிக்கின்றன. குறிப்பாக நெல், கோதுமை, சோளம் என்பனவற்றை குறிப்பிடலாம். இவை மூன்றும் தான் 1960 களில் நடந்த பசுமைப் புரட்சியின் முக்கியபயிர்களாகும். உணவின்றி தவித்த பலகோடி மக்களுக்கு உணவளிக்க இப்பயிர்களில் கலப்பினப்பாக்கம் செய்து புதுவகை இனங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலம் உணவுற்பத்தியை பலமடங்கு உயர்த்தினார்கள். அதனால் அனைவருக்கும் உணவுஎன்பது ஓரளவுக்கேனும் சாத்தியமானது. ஆனாலும் இன்னும் பலகோடி மக்கள் ஒருவேளை உணவுக்காக கையேந்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பது நெஞ்சை வருடும் செய்தியாகும். ஆனால் நாம் இங்கே பல விழாக்களில்




உணவை விரயஞ் செய்து கொண்டிருக்கின்றோம். நாம் காசு கொடுத்து வாங்கினால் உணவை விரயஞ் செய்யலாம் எனபொருள்படாது. உணவுஎன்பது எமது பொதுச் சொத்து. தனிமனிதனுக்கு உணவில்லையெனில் என வீராவேசம் கொண்டமக்கள் கூட்டம் நாங்கள். ஒருபக்கம் உற்பத்தி போதாதென்று வருத்தப்படும் போது மறுபக்கத்தில் விளைந்ததை முறையாகபாதுகாக்கவும் (குறிப்பாக சேமிப்பில் ஏற்படும் சேதம் மிகவும் அதிகம்) அதனை வினைத்திறனாக பயன்படுத்தவும் நாம் தவறிவிட்டோம்.சேதம் பலவகைகளில் என்றாலும் எம்மால் தவிர்க்கக்கூடியதைநாம் செய்யலாம் அல்லவா?

தானியப் பயிர்களுக்குகொடுக்கப்பட்ட வரவேற்பினையடுத்து


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 69

ஐம்பத்தைந்து ஆண்டுகள் கழித்து தற்போது அவரைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பொறுமையுடன் இருந்த அவரைகள் தமக்குரிய அந்தஸ்தினை பெற்றுவிட்டபெருமிதம் தெரிகின்றது. ஒவ்வொருவரினதும் அன்றாடஉணவில் அவரைகளின் பங்கு முக்கியமானது. குறிப்பாக புரதச்சத்தினை அதிகளவில் வழங்கக்கூடியதும் பிரச்சினைகளற்ற உணவாகவும் அவரைப்பயிர்கள் இருக்கின்றன. வெறுமனே அவித்து விட்டு உடனடியாகவே உண்ணக் கூடியதான உணவாகஅவரைகள் இருப்பது சிறப்புக்குரியது. அவரைகளுக்கான ஆராய்ச்சி இந்தியாவில் தெலுங்கானா மாநிலத்தின் ஐதராபாத்திலமைந்துள்ள உலக உலர்வலயபயிர்களுக்கான ஆராய்ச்சி (International Crops Research Institute for Semi Arid Tropics) நிறுவனத்தில் பலவருடங்களாக நடைபெற்று அதன் முடிவுகள் ஆசியாவிலுள்ள நாடுகளிலும் இன்னும் ஆபிரிக்கநாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்நிறுவனத்துடனிணைந்து எமது நாட்டிலும் விவசாயத்திணைக்களத்தில் பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அநுராதபுரத்தின் மாகா இலுப்பள்ளமை எனுமிடத்திலுள்ள ஆராய்ச்சி நிறுவனத்திலும் கிளிநொச்சியில் இரணை மடுச் சந்தியிலமைந்துள்ள வட பிராந்திய விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்திலும் அதன் கீழுள்ள திருநெல்வேலி, முருங்கன், வவுனியா, கரடியனாறு, பரந்தன் ஆகிய இடங்களிலமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்களிலும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அவரைப்பயிர்களின் (Pulses) தனித்துவமென்பது புரதச்சத்துக்குரிய பயிர்கள் என்பதாகும். ஒருவரதுநாடி (pulse) பிடித்துபார்க்கும் செயலாகவும் இதனைக்காணலாம். அதிகளவு தானியப்பயிர்களில் நாம் அக்கறை கொண்டுள்ளது போல அவரைப்பயிர்களில் பெரிதாக நாட்டம் கொள்ளவில்லை. மாச்சத்துப்பயிர்களின் அளவைக் குறைத்து புரதச்சத்து பயிர்களை நாம் அதிகளவில் உணவில் சேர்ப்பது நீரிழிவு போன்ற நோய்களிலிருந்து நாம் எமக்கு ஓரளவுக்கு விடுபட உதவும். அவரைகள் பலவகைகள் எமக்காக உண்டு. அவற்றை உண்டு நாம் உயிர் வாழ இயற்கை தந்திருப்பதை இனியும் அறிந்துஅவற்றின் பயன் பாட்டைபெறுவோம். கடலை, கொண்டல் கடலை, நிலக்கடலை, பயறு, உழுந்து, கௌபீ, பயற்றை, பீன்ஸ், சிறகவரை, பருப்பு, துவரம் பருப்பு, கொள்ளு இப்படிவிதம் விதமாக பல அவரைப்பயிர்கள் எமக்காக உண்டு. வீட்டில் வீட்டுத் தோட்டத்தில் சிறிதாகவளர்த்து அன்றாடம் எமது தேவைக்காக பயன்படுத்திக்கொள்ளலாம். பிரச்சினைகள் பெரிதாக இல்லாத இப் பயிர்களை வளர்ப்பதும் சுலபம். ஓரளவுக்கு வரட்சியை தாங்கி வளரக்கூடியதாக இப்பயிர்களை வளர்த்துநாம் பயன்பெறமுடியும்.

அவரைகளின் தனித்துவத்தில் இன்னொன்று அவை வளியிலுள்ள தழைச்சத்தை மண்ணில் நிலைநாட்டும் பொறிமுறையை வைத்திருப்பது தான். வளியிலுள்ள நைதரசனை தமது வேர் முடிச்சுக்களில் றைசோபியம் (Rhizobium) என்னும் நன்மை தரும் பக்றீரியாக்களின் உதவியுடன் முடிச்சுக்களை ஏற்படுத்தி அவற்றைதாவரங்கள் இலகுவாக அகத்துறிஞ்சும் நிலையில் சேமித்துவைக்கின்றன. இங்கே சூழலுக்கிணைவான தழைச்சத்தை நிலைநாட்டும் தொழில் நுட்பத்தை நுண்ணங்கிகள் செய்வதைக் காணலாம். ஆக மொத்தத்தில் எமக்கு உணவாகநாம் பயன்படுத்தாவிட்டாலும் மண்ணுக்கு சத்தைகொடுக்கும் உன்னத நிலைப்பாட்டை இங்கே பாருங்கள். இதன் மூலம் அவரைகள் நுண்ணங்கிகளுடன் சேர்ந்து மண்ணை வளப்படுத்துவதோடு மண்ணை வலுப்படுத்துவதாகவும் இருக்கின்றன. வளமாக்கி வலுவாக்கும் இந்தபொறிமுறைக்கு நாமும் வலுச்சேர்ப்பதாயின் பலவகையான அவரைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதோடு அவற்றை உணவாக்கும் வழிமுறைகளையும் கண்டறிய வேண்டும். யாழ்ப்பாண ஆதார வைத்தியசாலையின் நீரிழிவு மையம் வருடந்தோறும் நடத்தும் புத்தாக்க உணவு போட்டியில் இவ்வாறான அவரைகளை பயன்படுத்தி செய்யக்கூடிய உணவு வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டு சிறந்த போட்டியாளர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. அந்த உணவுகளை செய்வது பற்றிய குறிப்புகள் நூலாக நீரிழிவுமையத்தில் கிடைக்கின்றது. வைத்திய மற்றும் தாதி மாணவர்களின் பங்களிப்போடு உருவாக்கப்பட்ட இக் குறிப்புக்கள் எமது உணவில் மாற்றத்தை ஏற்படுத்த நிச்சயம் உதவும். குறிப்பாக நீரிழிவு நோயுள்ளவர்களுக்கான எளிய உணவுக் குறிப்புக்களை நிச்சயம் நாம் பெற்ற பயனடைய முடியும்.

அவரைகளைப் பற்றி பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள். முளைக்க விட்டு இவற்றை உணவுக்கு பயன்படுத்தினால் இன்னும் எமக்கு சத்துக்கள் கிடைக்க வாய்ப்புக்களுண்டு. வழிவகைகள் பல இருந்தும் நாம் அவற்றை பயன்படுத்தாமலிருப்பது எமது அலட்சியமே தவிர வேறெதுவுமில்லை. இதற்காக 2016 ஆம் ஆண்டை உலக அவரைகளுக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தியிருக்கின்றார்கள். இந்த ஆண்டில் அவரைகளின் அபிவிருத்திக்குநாம் முயற்சி செய்வோம். அவரைகள் அபிவிருத்தியடைந் தால் எமது அபிவிருத்தியும் உடல் உள சுகமும் உள்ளடங்கலாகும். சிவபுராணத்தில் புல்லாகிப் பூண்டாகி என விளித்து இறுதியில் அனைத்தும் இத்தாவர சங்கமத்தில் என்றதன் விளக்கமும் இதுதானே. வாழபல வழிகளுண்டு. விரும்பிய வழியைத் தெரிவு செய்யலாம். அனைவரும் இன்புற்று நல்லமனிதர்களாக சுகதேகி களாக வாழ அவரைகள் ஆண்டு வழிகள் பல செய்யும் என நம்பியிருப்போம்.






# குட்டித் தீவானது சென்னை நகரம்























# 1000 கோடி ரூபா நிவாரண நிதி சென்னையில் மோடி அறிவிப்பு

**தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மழை, வெள்ள பாதிப்புகளை சரிசெய்ய உடனடியாக 1,000 கோடி ரூபா வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி சென்னையில் வைத்து அறிவித்துள்ளார்.**







தமிழகத்தில் சென்னை, கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கன மழை பெய்துள்ளது. மழை, வெள்ளத்தால் இதுவரை 300 பேர் பலியாகி உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தமிழக வெள்ள பாதிப்புகளை பார்வையிட பிரதமர் மோடி தனி விமானம் மூலம் நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு அரக்கோணத்தில் உள்ள ராஜாளி விமான தளத்துக்கு வருகை தந்தார். அவரை உயர் அதிகாரிகள் வரவேற்றனர். பின்னர் சிறப்பு ஹெலிகொப்டர் மூலம் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட்டார். அவருக்கு மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் வெள்ள பாதிப்புகளை விபரித்தார்.

பின்னர் ராஜாஜி சாலையிலுள்ள ஐ.என்.எஸ். அடையாறு விமானத் தளத்துக்கு வந்த பிரதமர் மோடியை ஆளுநர் கே.ரோசய்யா, முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்டோர் வரவேற்றனர். பின்னர் அங்கு முதல்வர் ஜெயலலிதா, தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் சுமார் 30 நிமிடங்கள் மழை, வெள்ள பாதிப்புகள், மீட்பு, நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மோடி, "தமிழகத்தில் மழை, வெள்ள பாதிப்புகள் மிக கடுமையாக உள்ளதை நேரில் பார்வையிட்டேன். தமிழகத்துக்கு ஏற்கனவே ரூ. 940 கோடி வழங்கப்பட்டுள்ளது. தற்போது மழை, வெள்ள பாதிப்புகளை சரிசெய்ய உடனடியாக மேலும் ரூ. 1,000 கோடி வழங்கப்படும். மீட்பு, நிவாரண பணிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய மத்திய அரசு தயாராக உள்ளது. தமிழக மக்களின் துயரங்களில் மத்திய அரசு பங்கேற்கிறது" என பிரதமர் மோடி மேலும் தெரிவித்தார். (இ-7)

## 97 நிவாரண முகாம்களில் 62,000 பேர் தங்கவைப்பு

(சென்னை)

சென்னையில் வெள்ளநீர் சூழ்ந்த பகுதிகளில் இருந்து இதுவரை 62 ஆயிரத்து 267 பேர் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

சென்னையில் கனமழையால் அனைத்து பகுதிகளிலும் மழைநீர் சூழ்ந்துள்ளது. பெரும்பாலான வீடுகளில் வெள்ளநீர் புகுந்துள்ளது. மழை விட்டுவிட்டு பெய்துவரும் நிலையில் தேங்கியுள்ள நீரின் அளவு புதன்கிழமையை விட நேற்று முன்தினம் மேலும் அதிகரித்தது. இதனால் ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு, உடமைகளுடன் தொடர்ந்து வெளியேறி வருகின்றனர்.

அடையாறு, கூவம் மற்றும் பல்வேறு கால்வாய்களின் ஓரங் களில் வசித்து வந்தவர்கள் மற்றும் வீடுகளில் வெள்ள நீர் சூழ்ந்து வெளியேறியவர்கள் என நேற்று முன்தின நிலவரப்படி மொத்தம் 62 ஆயிரத்து 267 பேர் மீட்கப்பட்டு, 97 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள் ளனர்.

பொதுமக்களை மீட்கும் பணியில் 104 படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள் என. அவர்களுக்கு அம்மா உணவகங்கள் மற்றும் பல்வேறு இடங்களில் உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. (இ-7)

## 5 ஆயிரம் கோடி ரூபா உடனடியாக வேண்டும்

### பிரதமரிடம் ஜெயா நேரில் கோரிக்கை

தமிழகத்தில் மழை, வெள்ள பாதிப்புகளை சரி செய்ய உடனடி நிவாரணமாக ரூ. 5 ஆயிரம் கோடி வழங்க வேண்டும் என முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடியிடம் நேரில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு,

தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பிரதமர் நரேந்திர மோடியும், முதல்வர் ஜெயலலிதாவும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பார்வையிட்டனர். பிறகு பிரதமர் மோடியை சந்தித்து மழை, வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை விளக்கினார். தமிழக அரசின் சார்பில் மேற்கொள்ளப் பட்டு வரும் மீட்பு நிவாரணப் பணிகளையும் எடுத்துரைத்தார்.

தமிழகத்தில் மழை, வெள்ளத் தால் பாதிப்புகள் மிகக் கடுமையாக இருப்பதால் மீட்பு, நிவாரணப் பணி களுக்கு உடனடியாக 5 ஆயிரம் கோடி ரூபா வழங்க வேண்டும் என பிரதமரிடம் முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்தார். அதனை ஏற்று உடனடியாக ஆயிரம் கோடி ரூபா வழங்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

தமிழகத்துக்கு கூடுதலாக 10 இராணுவ குழுக்களையும், 20 தேசிய பேரிடர் மீட்புப் படை குழுக் களையும் அனுப்ப வேண்டும் என்ற முதல்வரின் கோரிக்கையையும் பிரதமர் ஏற்றுக் கொண்டார். இதற்காக பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா நன்றி தெரிவித் தார். (இ-7)

## ஜனாதிபதி இரங்கல்

(புதுடில்லி)

கனமழை மற்றும் வெள்ளத் தால் சென்னை உட்பட தமிழகத் தின் பல்வேறு பகுதிகள் பலத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இந்த மழை, வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'கனமழையால் சென்னை உட்பட தமிழகத்தில் பலர் உயிரிழந்ததையும், கட்டுமானங்களுக்கு ஏற்பட்ட சேதத்தையும் அறிந்து மிகுந்த துயருற்றேன். இந்த கடினமான நேரத்தில் இருந்து தமிழக மக்கள் விரைவில் இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும் என நான் பிரார்த்திக்கிறேன் என்று கூறியுள்ளார்.

தமிழக மக்கள் மிகுந்த வலிமையுடனும் மேன்மையுடனும் இந்த இக்கட்டான சூழலை கடந்து வருவார்கள் என நம்புவதாகவும் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். (இ-7)

## சென்னை மக்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்யத் தயார்

### அமெரிக்கா அறிவிப்பு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை மக்களுக்கு தேவையான அனைத்து உதவியையும் செய்ய தயாராக உள்ளதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக, வோஷிங்டன் நகரில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சக துணை செய்தி தொடர்பாளர் மார்க் டோனர் கூறியுள்ளதாவது,

பல ஆண்டுகளில் இல்லாத, மிகவும் மோசமான வெள்ளத்தில் சிக்கியுள்ள சென்னை மக்களுக்கு உதவி செய்ய அமெரிக்க அரசு தயார் நிலையில் உள்ளது. இந்த வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த மக்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் இன்னும் சிக்கித்தவிக்கும் மக்கள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்து வாடும் மக்களைச் சுற்றி எங்களது எண்ணங்கள் சூழ்ந்துள்ளன.

இந்த இக்கட்டான வேளையில் உதவுவதற்காக இந்திய அரசுடன் அமெரிக்க அரசு தொடர்ந்து தொடர்பில் உள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்கு எல்லாவித உதவியையும் செய்ய அமெரிக்கா தயார்நிலையில் இருப்பதாக நாங்கள் தெரிவித்துள்ளோம்.

இதுவரை எங்களிடமிருந்து எந்த உதவியையும் இந்திய அரசு கேட்கவில்லை. இதுபோன்ற வேளைகளில் அவசர உதவி மற்றும் பொதுச்சேவை நிலவரங்களை சுயமாக கையாளக்கூடிய அளவுக்கு இந்திய அரசு மிகவும் மேம்பாடு எய்தியுள்ளபோதிலும், குறிப்பாக, இந்தியாவைப்போன்ற வலிமையான நட்பு நாடுகளுக்கு பேரழிவுக்குப் பிந்தைய அனைத்து உதவிகளையும் செய்யவும் அமெரிக்க அரசு தயாராகவே உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7)

## ரஷ்யரின் கழுத்தை வெட்டிய ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள்

உலகில் பல்வேறு இயக்கங்கள் தீவிரவாத குழுக்கள் இயங்கி வருகின்ற போதிலும் ஐ.எஸ்.அமைப்பு மிகவும் கொடூரமான அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த அமைப்பினர் கடந்த ஒரு வருடகாலமாக மிகவும் மோசமாக காணொலிகளை வெளியிட்டு மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ள நிலையில் தற்போது ஒரு காணொலி வெளியிட்டுள்ளனர்.

அந்தவகையில், நபரொருவரின் கழுத்தை வெட்டிப் படுகொலை செய் யும் காணொலியொன்றை ஐ.எஸ். அமைப்பு நேற்று வெளியிட்டுள்ளது. உளவாளி எனக் கூறப்படும் ரஷ்ய நாட்டவர் ஒருவரின் கழுத்தையே ஐ.எஸ். தீவிரவாதிகள் இவ்வாறு வெட்டியுள்ளனர்.

அவர்களின் ஊடகப்பிரிவின் ஊடாகவே இக்காணொலியை அவர்கள் வெளியிட்டுள்ளனர். குறித்த காணொலியில் கழுத்தை வெட்டும் நபரும் ரஷ்ய நாட்டை சேர்ந்தவரென தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)




# புதையல்!

ஆலங்குளம் என்னும் கிராமத்தில் சங்கரன் என்றொருவன் வசித்து வந்தான்.

விவசாயத் தொழில் செய்து வந்த அவன் மிகவும நற்குணம் படைத்தவன்.

எப்போதும் உழைத்துக் கொண்டே இருப்பான்.

அவன் மனதளவில்கூட யாருக்கும் எந்தத் தீமையும் செய்ய நினைக்காமல் வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் இரவில் சங்கரன் உறங்கிக் கொண்டிருந்தான். அப்போது அவன் ஒரு கனவு கண்டான்.

கனவில் அவனது வீட்டுக் கூரையிலிருந்து வெள்ளிக் காசுகளும், தங்கக் காசுகளும் கொட்டின.

சற்று நேரத்தில் கனவும் கலைந்து போனது.

மறுநாள் வைகறைப் பொழுதில் வழக்கம் போல சங்கரன் எழுந்தான்.

இரவில் தான் கண்ட கனவு அவனுக்கு நினைவுக்கு வந்தது.

"என்ன ஓர் அற்புதமான கனவு அது!" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் சங்கரன்.

கனவில் வெள்ளிக்காசுகளும், தங்கக் காசுகளும் கிடைத்தாலும் நிஜத்தில் அவன் ஓர் விவசாயிதானே!

எனவே வழக்கம்போலவே, அவன் தன் வயலுக்குப் புறப்பட்டுச் சென்றான்.

இருப்பினும் இரவில் கண்ட கனவு அவன் நினைவில் வந்து கொண்டேயிருந்தது.



சங்கரன் சற்று தூரம் சென்றான்.

வழியில் அவனது நண்பன் மூர்த்தி வந்து கொண்டிருந்தான்.

நண்பனைக் கண்டதும் சங்கரன் மகிழ்ந்தான்.

சங்கரன் தன் நண்பன் மூர்த்தியிடம், "மூர்த்தி உன்னைப் பார்த்தது மகிழ்ச்சி தருகிறது!

உன்னிடம் ஒரு முக்கியமான செய்தி சொல்ல வேண்டும். நேற்று இரவில் நான் ஒரு கனவு கண்டேன்.

அக்கனவைப் பற்றி உன்னிடம் சொல்ல வேண்டும் என்று விரும்பினேன்.

நல்லவேளை நீயே எதிரில் வந்துவிட்டாய்!" என்றான்.

"அப்படியா? அப்படி என்ன கனவு கண்டாய். என்னிடம் சொல்லு!" என்றான் மூர்த்தி.

"நேற்று இரவு நான் கண்ட கனவில் என் வீட்டுக் கூரையிலிருந்து வெள்ளிக் காசுகளும், தங்கச் காசுகளும் கொட்டின!" என்று கூறினான் சங்கரன்.

சங்கரனைப் போல மூர்த்தி நற்குணம் கொண்டவன் அல்ல.

அவன் துர்க்குணம் படைத்தவன். மேலும், அவனிடம் எல்லாரையும் கேலி செய்யும் குணமும் உண்டு.

சங்கரன் கூறியதைக் கேட்டதும் உள்ளுக்குள் சிரித்துக் கொண்ட மூர் த்தி, அவனைக் கேலி செய்ய நினைத்தான்.

எனவே சங்கரனைப் பார்த்து, "ஆஹா! உனக்கும், எனக்கும் என்னவொரு ஒற்றுமை பார்த்தாயா? நேற்று இரவில் எனக்கும் ஒரு கனவு வந்தது.

என் கனவில் தங்கக் காசுகள் கூரையிலிருந்து கொட்டவில்லை.

நிலத்தின் அடியிலிருந்து புதையல் கிடைத்தது!" என்று கேலியாகப் பொய் ஒன்றைச் சொன்னான்.

மூர்த்தி கூறியதை உண்மையென்றே நம்பி விட்டான் சங்கரன்.

எனவே அவன் மூர்த்தியிடம், "மூர்த்தி! இது போன்ற கனவுகள் உண்மையில் பலிக்குமா?" என்று கேட்டான்.

"சங்கரா! பலருக்கு இம்மாதிரியான கனவுகள் பலித்திருக்கிறது.

எனவே நம்முடைய கனவும் பலிக்க வாய்ப்பிருக்கிறது!" என்று கேலியாகச் சொல்லிவிட்டு சங்கரனிடம் விடைபெற்றுச் சென்றான்.

நண்பனை அனுப்பிவிட்டு வயலுக்குச் சென்றான் சங்கரன்.

அவன் தன் ஏரைப் பூட்டி, தன் நிலத்தை உழத் தொடங்கினான்.

சிறிது நேரம் உழுதபின், எதிர்பாராதவிதமாக அவனது கலப்பை ஏதோவொரு கடினமாக பொருள் மீது மோதியது.

கணீரென்ற சத்தம் எழுந்தது. சங்கரன் அந்த இடத்தை மேலும் நன்றாகத் தோண்டிப் பார்த்தான். அங்கே ஒரு பித்தளைக் குடம் தென்பட்டது.

"அட! மண்ணுக்குள் பித்தளைக்குடமா? இந்தக் குடம் கனமாகவும் இருக்கிறதே! நிச்சயமாக இதற்குள் வெள்ளி, தங்கக் காசுகள் தான் இருக்க வேண்டும்" என்று மனதிற்குள் சொல்லியவாறு அதைத் திறக்க முயன்றான் சங்கரன்.

(தொடரும்)




- 1492 - கொலம்பஸ் ஹிஸ்பனியோலா தீவை அடைந்தார். இத்தீவை அடைந்த முதலாவது ஐரோப்பியர் இவரே.
- 1893 - மின்சாரத்தில் இயங்கும் தானுந்து அறிமுகமானது.
- 1936 - சோவியத் ஒன்றியம் தனது புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது. கிர்கிஸ்தான் சோவியத் ஒன்றியத்திற்குள் முழுமையான குடியரசாக அறிவிக்கப்பட்டது.
- 1957 - இந்தோனீசியாவிலிருந்து அனைத்து 326 ஆயிரம் டச்சு மக்களும் வெளியேற்றப்பட்ட னர்.
- 1958 - STD தொலைபேசி இணைப்பு சேவை ஐக்கிய இராச்சியத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணியால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1969 - அமெரிக்க படைத்துறை உயர் ஆய்வு நிறுவனத்தால் இணையம் நிறைவேறியது.
- 1983 - ஆர்ஜெண்டீனாவில் இராணுவ ஆட்சி கலைக்கப்பட்டது.
- 1995 - இலங்கை அரசு யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து தாம் முழுமையாகக் கைப்பற்றியதாக அறிவித்தது.
- 2006 - பிஜியில் இராணுவப் புரட்சி மூலம் அதன் இராணுவத் தளபதி வொரெக் பைனிமரமா அரசைக் கைப்பற்றினார்.
- 2006 - இந்திய நடுவண் அரசில் நிலக்கரித்துறை அமைச்சராக இருந்த சிபு சோரன் 1994 இல் அவரது உதவியாளரைக் கொலை செய்த குற்றத்துக்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்.

**பிறப்புக்கள்**

- 1782 - மார்ட்டின் வான் பியூரன், ஐக்கிய அமெரிக்காவின் 8 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1848)
- 1901 - வால்ட் டிஸ்னி, உலகப் புகழ் பெற்ற ஓவியர் (இ. 1966)
- 1901 - வேர்னர் ஐசன்பேர்க், ஜெர்மனிய இயற்பியலாளரும், நோபல் பரிசு பெற்றவரும் (இ. 1976)
- 1966 - தயாநிதி மாறன், இந்தியாவின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்புத் துறையின் நடுவண் அமைச்சர்
- 1985 - ஜாஷ் ஸ்மித், அமெரிக்கக் கூடைப்பந்தாட்டக்காரர்

**இறப்புகள்**

- 1879 - ஆறுமுக நாவலர், ஈழத்தின் சைவ ஆன்மீகவாதி, தமிழ் உரைநடையின் தந்தை, (பி. 1822)
- 1926 - குளோட் மொனே, பிரெஞ்சு ஓவியர் (பி. 1840)
- 1950 - ஸ்ரீ அரவிந்தர், இந்திய ஆன்மீகவாதி, (பி. 1872)
- 1954 - கல்கி கிருஷ்ணமூர்த்தி, தமிழ் எழுத்தாளர் (பி. 1899)
- 2013 - நெல்சன் மண்டேலா, தென்னாப்பிரிக்காவின் கறுப்பினத் தலைவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1918)

# பெண் ஊடகவியலாளரை அச்சுறுத்திய கோத்தபாய ராஜபக்ஷவின் சட்டத்தரணி

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் சட்டத்தரணியான, ஜனாதிபதி சட்டத்தரணி அலி சாப்ரி, பெண் ஊடகவியலாளர் ஒருவரை அச்சுறுத்தியுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுளளது.

தினமின பத்திரிகையின் பெண் ஊடகவியலாளரே இவ்வாறு அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

பாரிய நிதி மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் எதிரில் நேற்றுமுன்தினம் வாக்கு மூலமொன்றை அளிக்க கோத்தபாய ராஜபக்ஷ சென்றிருந்த போது அந்த செய்தியை சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் சட்டத்தரணி அலி சாப்ரயினால் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.



பெண் ஊடகவியலாளரை திட்டிய போது அருகாமையில் ஊடகவியலாளர்களும், சட்டத்தரணிகளும் பிரசன்னமாகியிருந்தனர்.

தமது கட்சிக்காரரர் அபிமானமுடையவர் எனவும், ஊடகவியலாளர்கள் பெறுமதியற்றவர்கள் எனவும் சட்டத்தரணி சாப்ரி தெரிவித்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னதாக சாட்சியமளித்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தமயந்தி ஜயரட்னவின் சாட்சியம் பற்றிய விபரங்களையும் பிழையாகவே ஊடகங்கள் வெளியிட்டிருந்தன என அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இதேவேளை, பொய்யாக எதனையும் செய்தி அறிக்கையிடுவதில்லை என குறித்த பெண் ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

தமக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல குறித்து, குறித்த ஊடகவியலாளர் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கும் தெரியப்படுத்தியுள்ளார். (இ-7-10)

# புலம்பெயர் இலங்கையர்களால் கூட்டமைப்புக்கெதிராக போர்க் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**போர்க்குற்றச் செயல்கள் தொடரபில் விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக முறைப்பாடுகளை ஆதாரங்களுடன் முன்வைக்க வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் குழுவொன்று முன்வந்துள்ளது.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள பல அரசியல்வாதிகள் கனடா, பிரித்தானியா, ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து அங்கு நடத்திய ஆதரவு கூட்டங்களில் தெரிவித்த கருத்துகள் அடங்கிய ஒலிப்பதிவுகள் தங்களிடம் இருப்பதாக வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் அறிவித்துள்ளனர்.

இதற்காக முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலரின் உதவியும் இவர்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அக்குழு குறிப்பிட்டுள்ளது. (இ-7-10)

# பிள்ளையானுக்கு சிறையில் தனியறை

பிள்ளையானுக்கு சிறைச்சாலையில் தனியறை வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய கைதிகளுடன் இருக்க முடியாது எனவும் தமக்கு தனிச் சிறையறை ஒன்றை வழங்குமாறும் பிள்ளையான் அண்மையில் நீதிமன்றில் கோரியுள்ளார். இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மட்டக்களப்பு நீதவான் எம்என் அப் துல்லா அதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை சம்பவம் தொடர்பில் பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் பிள்ளையானிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அண்மையில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது சட்டத்தரணியின் ஊடாக சிறையில் தனியறையொன்றில் தம்மை அடைக்குமாறு பிள்ளையான் விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். இதே வேளை, நீதிமன்றிலிருந்து சிறைக்கு செல்லும் போது தாம் எந்தக் குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை என பிள்ளையான் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார். (இ-7-10)



# எதிராக வாக்களித்த உறுப்பினர்கள் குறித்து சு.கவின் மத்திய செயற்குழு தீர்மானிக்கும்

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானிக்கும் என பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொள்கை அடிப்படையில் தேசிய அரசாங்கத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது.

அதேபோன்று தேசிய அரசாங்கத்தின் பிரதான பங்காளியாகவும் சுதந்திரக்கட்சி திகழ்கின்றது.

இதனால் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கோரியிருந்தார். கட்சி என்ற ரீதியில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அனைவரும் இணங்க வேண்டும்.

அவ்வாறு இன்றி தமக்கு தேவையான வகையில் நடவடிக்கை எடுக்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை துண்டு துண்டாக உடைக்க எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை.

கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படும் எந்தவொரு நபருக்கு எதிராகவும் தராதரம் பாராது எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## வெறிநோய் (Rabies)

ஒருவர் மிகவும் அமைதியானவர். எப்பொழுதும் மிக மெதுவாகத் தான் நடப்பார்.

எப்பொழுதும் சிரித்த முகம். அப்படிப்பட்ட மனிதர் ஒரு நாள் தலைதெறிக்க ஓடிவந்து கொண்டிருந்தார்.

விடயம் என்னவொன்றால்.... ஒரு வெறி நாய் அவரைத் துரத்திக் கொண்டிருந்தது. வெறி நாயென்றால் அவ்வளவு பயம்.

வெறி பிடித்த நாய் கடித்து விட்டால் அது மிகவும் ஆபத்தான விடயம். இருந்தாலும் எச்சரிக்கையாக இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம்.

வெறி நாய் கடித்து விட்டால் உடனே டாக்டரிடம் போய் ஊசி போட்டுக் கொள்வது தான் நல்லது.

வெறி பிடித்த நாய் 10 நாட்களுக்கு மேல் உயிரோடு இருக்காது.

முன்பெல்லாம் வயிற்றில் தொப்புளைச் சுற்றி 14 ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இப்பொழுது வெறும் 6 ஊசிதான். அதுவும் தோள் பட்டையில் போட்டுக் கொண்டால் போதும். அதை விட சுலபமான மருந்து கூட வந்து விட்டது.

நாய், பூனை, மாடு, குதிரை, ஆடு இவற்றுக்கெல்லாம் கூட வெறி பிடிக்கும்.

ஒருவெறி பிடித்த பிராணி கடித்தால் அல்லது அதன் நகக்கீறல் ஏதாவது ஏற்பட்டிருந்தால் நாம் செய்ய வேண்டிய முதலுதவி என்ன தெரியுமா?

காயத்தை அதிகளவு தண்ணீர் ஊற்றி சவர்க்காரம் போட்டு கழுவ வேண்டும். அதன் பின்னர் ஏதாவது கிருமி நாசினி அல்லது ஸ்பிரிட் தடவ வேண்டும்.

இன்னொரு முக்கியமான விடயம், காயத்துக்குக் கட்டுப்போடக் கூடாது. அதைத் திறந்தே வைக்க வேண்டும். உடனே டாக்டரிடம் செல்ல வேண்டும்.

வெறிநோய் என்பது விலங்குகள் மூலமாக மனிதர்களுக்கு பரவக் கூடிய ஒரு வைரஸ் கிருமியால் ஏற்படும் நோய்.

1885 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூயி பாஸ்டர் என்பவர் தான் வெறி நோய் தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தார்.

முதல் தடவையாக ஜோசப் மெய்ஸ்ட்டர் என்ற சிறுவனுக்குத் தான் இத் தடுப்பூசியை ஏற்றி வெறி நோயிலிருந்து அச்சிறுவனைக் காப்பாற்றினார்.

அவரைக் கௌரவிக்கும் வகையில் அன்று முதல் வெறி நோய்த் தடுப்பூசிக்கு பாஸ்டர் வெறிநோய்த் தடுப்பூசி என்ற பெயர் ஏற்பட்டது. பல பாஸ்டர் நிறுவனர்கள் உலகம் முழுவதும் உருவாகின. முதலாம் உலகப்போர் நடந்த சமயத்தில் நாசிக் கூட்டத்தார் பாஸ்டர் நிறுவனத்தை இடித்து தரை மட்டமாக்க முயன்றனர்.

அப்பொழுது அங்கே வாயில் காப்பாளனாக இருந்த ஒரு வீரன் அந்த நிறுவனத்தைக் காப்பாற்றும் முயற்சியில் தன் உயிரைத் தியாகம் செய்தான். அவர் யார் தெரியுமா?

அவன் தான் முதன் முதலில் வெறி நோயிலிருந்து லூயி பாஸ்டரால் காப்பாற்றப்பட்ட சிறுவன் ஜோசப் மெய்ஸ்ட்டர்.

இப்பொழுது நவீன மருந்துகளெல்லாம் இருந்தும் கூட கவனக் குறைவால் உயிர் இழப்பவர்கள் அதிகம். ஒருவன் ஓடி வந்தான். என்னை ஒருவெறி நாய் கடித்து விட்டது என்றான்.

''சரி... அப்படியானால் உன்னைக் கடித்த நாய் எதுவென்று உன்னால் அடையாளம் காட்ட முடியுமா?''

"முடியும்'' என்றான்.

"எப்படி?'' என்று கேட்டார்.


''அந்த நாய் என்னைக் கடிப்பதற்கு முன் ஜாக்கிரதையாக அதன் காதை கடித்து விட்டேன். இதே பையில் தான் வைத்திருக்கிறேன்'' என்று சொல்லி எடுத்துக் காட்டினான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

71

## சந்திரலேகா உருவானபோது வாசனுக்கு ஏற்பட்ட சோதனைகள்



**கதை இலாகா**

ஜெமினி கதை இலாகாவில் உள்ள கே.ஜே. மகாதேவன், கொத்தமங்கலம் சுப்பு, வேப்பத்தூர் கிட்டு, நயினா ஆகியோர் பல மாதங்கள் இரவு-பகலாக விவாதித்து கதையை உருவாக்கினார்கள்.

படத்தில் சர்க்கஸ் காட்சி இடம் பெறவேண்டும் என்று வாசன் கூற, அதற்கு ஏற்ற வகையில் கதையில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

ஜெமினி ஸ்டுடியோ அதிகாரிகள், காஷ்மீர் முதல் கன்னியாகுமாரி வரை சுற்றுப்பயணம் செய்து படத்தில் நடிக்க ஒரு சர்க்கஸ் குழுவை ஒப்பந்தம் செய்தார்கள். (இந்த சர்க்கஸ் கம்பெனியின் பெயர், பிற்காலத்தில் ஜெமினி சர்க்கஸ் என்று மாற்றப்பட்டது)

பாடல்களை பாபநாசம் சிவனும் கொத்தமங்கலம் சுப்புவும் எழுத, எஸ்.ராஜேஸ்வரராவ் இசை அமைத்தார்.

ஒளிப்பதிவு: கமால்கோஷ். கலை: ஏ.கே.சேகர். எடிட்டிங்: சந்துரு. மங்கலம்மா சபதத்தை டைரக்ட் செய்த ஆச்சார்யாதான், சந்திரலேகாவை டைரக்ட் செய்வதாக இருந்தது.

வாசனுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் அவர் விலகிக் கொள்ள, வாசன் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றார். அவர் டைரக்ட் செய்த முதல் படம் இதுதான்.

ஜெமினி ஸ்டுடியோவின் சகல பிரிவுகளிலும் சந்திரலேகாவுக்கான வேலைகள் இரவு பகலாக நடந்தன. சந்திரலேகா ஓரளவு நவீனம் கலந்த ராஜா-ராணி கதையாதலால் அதற்கான உடைகளைத் தயாரிப்பதில் ஏராளமான தையல் கலைஞர்கள் இரவு பகலாக ஈடுபட்டிருந்தனர்.

எங்கு பார்த்தாலும் குதிரைகள், யானைகள்! கூண்டுகளுக்குள் புலிகள் சிங்கங்கள்!



சந்திரலேகாவில் இடம்பெற்ற பிரமாண்டமான முரசாட்டம்

படத்தின் இறுதியில் இடம்பெறும் பிரமாண்டமான முரசாட்டக் காட்சிக்காக பெரிய பெரிய முரசுகள் தயாரிப்பதில் தச்சுவேலை தொழிலாளர் கள் ஈடுபட்டிருந்தனர்.

**அடமானம்**

படத்தயாரிப்பும் செலவுக்காக தன் சொத்துக்களை எல்லாம் அடமானம் வைத்து பணம் திரட்டினார் வாசன்.

இரண்டு மூன்று ஆண்டுகளாகியும் படம் முடிகிற வழியாக இல்லை. மேலும் மேலும் பணத்தை விழுங்கிக் கொண்டே இருந்தது.

இதுபற்றி பிற்காலத்தில் வாசன் குறிப்பிட்டதாவது:-

சந்திரலேகா படத்தைத் தயாரிக்க நான் திட்டமிட்டதற்கு மேலாகப் பணம் செலவாகிக்கொண்டிருந்தது.

கையில் இருந்த பணத்தையெல்லாம் செலவு செய்தபின்னர் ஜெமனி உட்பட என் சொத்து அனைத்தையும் அடமானம் வைத்து விட்டேன். அப்படியும் படம் முடிந்த பாடில்லை. கடனால் ஏற்பட்ட கவலையை விட அப்பெருந்தொகைக்கு கட்டிய வட்டியை நினைக்கும்போது நான் சற்று தளர்ந்துவிட்டேன்.

என்னைப் புரிந்து கொண்டவர்கள் மட்டுமல்ல, மற்றவர்கள் கூட இத்துடன் வாசன் போய் விடுவார். (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 339

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

**...அ**டுத்த நாள் அவன் கடைத் தெருவிற்குச் சென்று கடைக்காரனிடம் மிகவும் வேண்டிக்கேட்டுக் கொண்டான், தயவுசெய்து எனக்கு ரொம்ப முற்றலாகவோ அல்லது ரொம்பப் பிஞ்சாகவோ இல்லாத நல்ல வெண்டைக்காய்கள் கொஞ்சம் கொடு.


கடைக்காரரும் அவரே சிறந்த வெண்டைக்காய்களாகப் பொறுக்கியெடுத்துக் கொடுத்தார்; அவன் வீட்டிற்கு எடுத்துச் சென்று மனைவியிடம் காட்டினான். அதைப் பார்த்த மனைவி சொன்னாள். என்ன? இன்றைக்கும் வெண்டைக்காய் வாங்கிக் கொண்டு வந்துவிட்டீர்களா!

(பலத்த சிரிப்பு)

நம்மில் பலருக்கும் பாராட்டுதல் என்பது ஒரு போதும் தன்னிச்சையாக வருவதில்லை. நம்மால் தன்னிச்சையாகப் பாராட்ட முடியவில்லையென்றால் நம்மிடம் குறை கூறும் அல்லது அதிருப்தியுடன் இருக்கும் இயல்பு இருக்கிறது என்று அர்த்தம். உண்மையில் அதிருப்தியே நமது மனதின் உணவாகும்.

அதிருப்தியுடன் இருப்பது என்பது மனதிற்கு மெல்வதற்குக் கொஞ்சம் உணவு கொடுப்பதைப் போன்றது. மனம் அதை உட்கொண்டு தன்னை சுறுசுறுப்புடன் வைத்திருக்கும்.

நாம் மிகவும் திருப்தியுடன் இருக்கும்பொழுது என்ன நிகழ்கிறது? மனதிற்கு உணவில்லாமல் போகிறது.



அதற்கு என்ன செய்வதென்று தெரிவதில்லை. அது தன் உணவைத் தேட ஆரம்பிக்கிறது!

ஒரு பெண்மணி செருப்புக் கடைக்குச் சென்றாள். அவள் கால்களுக்குப் பொருந்தும்படியான செருப்பைக் கேட்டாள்; விற்பனையாளரும் அவளுக்குப் பொறுமையாக பல ஜோடி செருப்புகளைக் காண்பித்தார்.

அவளும் ஒன்றன்பின் ஒன்றாக முயற்சிசெய்து எதுவும் அவளுக்குச் சரியாகப் பொருந்தவில்லை என்று எண்ணினாள்.

இறுதியாக விற்பனையாளர் ஒரு ஜோடி செருப்புகளைக் காண்பித்து அவற்றை முயற்சி செய்து பார்க்குமாறு சொன்னார். அவள் அதை போட்டுப் பார் த்துவிட்டுச் சொன் னாள், இது மிக வும் சரியாகப் பொருந்துகிறது. ஆனால் இது சரியான அளவுதானா என்று நான் ஆச்சரியமடைகிறேன். (சிரிப்பு)

நீங்கள் திருப்தியாக இருப்பதில்லை என்று தீர்மானம் செய்துவிட்டீர்களானால் பிறகு உங்களுக்கு யாராலும் உதவ முடியாது.

அது உங்கள் மனதின் ஒரு நிலை. அதற்கு உங்களால் மட்டுமே உதவிக் கொள்ள முடியும். நம்மில் பலரும் அதிருப்தியாக இருப்பதிலும் பேசுவதிலும் ஒருவிதமான வசதிப்பகுதியை உணர்கிறோம்.

ஏனெனில் அதைப் பற்றிப் பேசுவதற்கு எப்பொழுதும் ஏதாவது இருந்துகொண்டே இருக்கிறது. மனதிற்கு எப்பொழுதும் வேலை இருந்துகொண்டிருக்கிறது.

எப்பொழுதும் திருப்தியாக இருப்பது என்பது மனதை இழப்பதைப் போன்றது.

நாம் எப்பொழுதும் திருப்தியாக இருக்க விரும்புவதாகச் சொன்னாலும் அது நிகழும்பொழுது நாம் தயாராக இல்லாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# ஊழலற்ற தேசத்தை உருவாக்க மக்களின் பங்களிப்பு அவசியம்

## கீர்த்தி தென்னக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழலை முற்றாக ஒழிக்கக் கூடிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபேயின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன், ஊழல்கள் அற்ற தேசத்தை உருவாக்க நாட்டு மக்களின் முழுமையான பங்களிப்பும் அவசியம் என தெரிவித்துள்ளார்.**

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் எனும் தொனிப்பொருளில் யாழ்.நகரில் மக்கள் விழிப்புணர்வு செயற்றிட்டமும் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் செயற்றிட்டமும் நேற்று காலை இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவால் முன்னெடுக்கப் பட்டிருந்தது. இதன் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்கக் கூடிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இவை சம்பந்தமாக சட்டப்படி தண்டனை பெற்றுக்கொடுப்பதனை விட இலஞ்ச ஊழலை தடுத்து நிறுத்துவது எப்படி என்ற கோட்பாடு மிகவும் அத்தியாவசியமாக காணப்படுகின்றது. அரச நிறுவனாங களுக்கு மாத்திரம் இவ் விழிப்பு ணர்வை செயற்படுத்த முடியாது.

பலகோடி மக்கள் நிறைந்துள்ள இலங்கையில் நடைபெறுகின்ற இலஞ்ச ஊழலை நடத்த எங்களால் முடியாது. ஆகவே அனைத்து பொது மக்களின் உதவிகளையும் நாம் நாடி நிற்கின்றோம். ஆதலால் தான் மக்களுக்கு நாம் விழிப்புணர்வு ஊட்டுகின்றோம். காரணம் இலஞ்சம் மற்றும் ஊழல் சம்பந்தமாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு மக்களுடைய ஒத்துழைப்பு அவசியமாகும்.

அது மட்டுமல்ல இலஞ்சம் மற்றும ஊழல்கள் சம்பந்தமாக முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பெறும் போது அந்த முறைப்பாடுகளை புலன் விசாரணை செய்து சட்டத்தின் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மக்களுடைய ஒத்துழைப்பு எமக்கு அவசியமாகும். இன்று எமது நாட்டினை பொறுத்த மட்டில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு அநேகமான புலனாய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

12 மில்லியனுக்கும் அதிகமான முறைப்பாடுகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு புலனாய்வு மேற கொள்கின்றது. இதற்கு ஒரே காரணம் மக்கள் எமது பணியை மதித்து எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதே. இவ் ஆணைக் குழுவின் 1954 என்ற முறைப்பாட்டு இலக்கத்திற்கு உங்களுடைய தகவலககளை வழங்குவதன் ஊடாக எமது நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

மக்கள் எமக்கு வழங்கும் தகவல்கள் சம்பந்தமாக நாங்கள் இரகசியத்தை பாதுகாத்து கொள்ளுவோம். தகவல்கள் யார் வழங்கியது என்று யாருக்கும் கூறமாட்டோம். தகவல்களை பதிவு செய்து கொண்டு புலனாய்வு மேற்கொள்ளுவோம். ஏற்கனவே எமக்கு தகவல்கள் தந்தோரினை பாதுகாத்து வெற்றிகரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இதன் மூலம் நாம் காட்டிக்கொடுப்பவர்கள் அல்லர் என்பதனை நிரூபித்தும் உள்ளோம்.

எமது நடவடிக்கைகளை முழு வடக்கு மாகாணத்திற்கும் அறிவிப்பதற்கு தான் இப்போது வடக்கு மாகாணத்திற்கு வருகை தந்துள்ளோம். முதல் ஆரம்பம் யாழ்ப்பாணத்திலும் அடுத்ததாக வவுனியாவிலும், கிளிநொச்சியிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

வடக்கிலுள்ள எமது மக்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். எங்கள் மீது நம்பிக்கை வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான தகவல்களை எமக்கு வழங்குங்கள். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிர்காலத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் அற்ற ஒரு நேர்மையான தேசத்தை கட்டியெழுப்புவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

### புலமைப்பரிசிலில் சித்தியெய்திய மாணவனுக்கு வீடும் பணமும்

இம்முறை நடைபெற்ற தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த இறக்குவானை புனித அந்தனிஸ் வித்தியாலய மாணவன் பசிந்து மெதுங் கொடவின் கல்வி நடவடிக்கைக்காக 35 ஆயிரம் ரூபாய் நிதியை சப்ரகமுவ மாகாண ஆளுநர் வழங்கி வைத்தார்.

எவ்வித வசதிகளும் அற்ற நிலையில் சிறிய கூடாரத்தில் இருந்து கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனின் குடும்பத்திற்கு புதிய வீடொன்றை அமைத்துக் கொடுப்பதற்கும் சப்ரகமுவ மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-10)

### பிரியாவிடையும் கௌரவிப்பும்

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம்–5 மாணவர்களின் பிரியாவிடையும் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ் நீராவியடிப் பகுதியிலுள்ள இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் தலைவர் த.சுகந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண இளைஞர் விவகார பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினராக அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கௌரவ விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராசா கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 565

Search for people, places and things Nagendram Home

**தேவகுமார்**




**சுதன் சர்மா**


கையில் சூலம் கொண்டோ
தோளில் சிலுவை சுமந்தோ....!!!!
ஒளியின் திருவாய் மலர்ந்தோ
கடவுள் நம்மிடம் வருவதில்லை....!!!!

வீழும் போது தூக்கி விடுவோரும்
தாழும் போது தோள் கொடுப்பவரும்....!!!!
புன்னகையை பரிசளிப்பவரும்
புண்ணியம் செய்து வாழ்பவர்களும் கூட
கடவுளின் வடிவங்களே....!!!!
புரிந்தவன் கடவுளைக் காணுகிறான்....!!!!
புரியாதவன் இன்னும் தேடுகிறான்....!!!!

**ஜெயகோடி**




**நதீபன் நதி**




**டீ சஜி**




**பரமகம்சன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ரக்பி வீரர் வஸீம் தாஜுடின் கொலை செய்யப்பட்டுள்ளார்

## நீதிமன்றத்தில் மருத்துவ நிபுணர்கள் அறிக்கை

2012 ஆம் ஆண்டு இடம் பெற்ற ரக்பி வீரர் வாஸிம் தாஜுடினின் மரணம், கொலை என்று கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தாஜுடின் கார் விபத்து ஒன்றின்போதே மரணமானார் என்று விசாரணைகள் முடிக்கப்பட்டிருந்தன.

எனினும் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ விசாரணைகளின் அடிப்படையில் தாக்குலுக்குள்ளான தாஜுடின் கொலை செயயப்பட்டு பின்னர் தமது காரின் இடது ஆசனத்தில் அமர வைக்கப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் விசேட மருத்துவர் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டது.

மீள் மருத்துவ பரிசோதனைக்கான தாஜுடினின் சடலம் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் தெஹிவளை மயானத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்டது.

மருத்துவ அறிக்கையின்படி தாஜுடினின் கால், கழுத்து, வயிறு போன்ற இடங்களில் காயங்கள் காணப்பட்டன. இது கார் எரியூட்டப்பட்டபோது ஏற்பட்ட காயங்களாக இருக்கலாம். எனினும் உயிர் பிரியும் சில நிமிடங்களுக்கு முன்னரே தாஜுடினின் கார் எரியூட்டப்பட்டுள்ளதாக நீதிமன்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

எனவே தமது நியாயப்படி தாஜுடின் கார் விபத்தில் கொல்லப்படவில்லை என்று நீதிமன்றத்தில் மருத்துவ சபையினர் தெரிவித்தார்.

தலையில் ஏற்பட்ட காயம் பெரும்பாலும் சுயநினைவற்ற நிலையில் ஏற்பட்டிருக்கலாம்.

எனினும் இடது முழங்கால் தாக்குதல் நடத்தப்பட்டு முறிவடைந்துள்ளது. (இ-7-10)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 04.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 140.95 | 145.28 |
| பவுண்ட் | பிரிட்டன் | 212.29 | 220.48 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 152.72 | 159.34 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 140.79 | 147.17 |
| டொலர் | கனடா | 104.83 | 109.51 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 102.28 | 107.38 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.41 | 104.58 |
| ரூபா | இந்தியா | 2.1411 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 379.9528 |
| குவைத் | டினார் | 470.3655 |
| ஓமான் | ரியால் | 372.1257 |
| கட்டார் | ரியால் | 39.3603 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.1821 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.0029 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 150 | 130 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 55 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 650-700 | 600 | 800 | 800 |
| தக்காளி | 200 | 200 | 160 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 20 | 50 | 40 |
| கோவா | 180 | 200 | 140 | 200 | 180 |
| கரட் | 150 | 200 | 130 | 280 | 140 |
| பூசணி | 60 | 40 | 35 | 60 | 50 |
| புடோல் | 160 | 120 | 110 | 160 | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 120 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 75 | 100 | 100 |
| பாகற்காய் | 350 | 300 | 220 | 400 | 280 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 100 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 120 | 80 |
| பயற்றங்காய் | 250 | 200 | 180 | 200 | 300 |
| லீக்ஸ் | 150 | 100 | 150 | 200 | 160 |
| பீற்றூட் | 100 | — | — | 200 | 80 |
| கறிமிளகாய் | 400 | — | 200 | 320 | 300 |
| முருங்கைக்காய் | 400 | — | 200 | — | — |
| போஞ்சி | 250 | — | — | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 110 | 120 | — |
| கீரை - 1 பிடி | 70 | 50 | 30 | 30 | 60 |
| தேசிக்காய் | 150 | 200 | 140 | 120 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-60 | 35-45 | 30-45 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | — | — | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | — | — | 30 | 50 |
| வல்லாரை | 10 | — | — | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 50 | 40 | 60-120 | 50 |


# இலங்கைத் தமிழர் வரலாறு

## 1977 தேர்தலில் ஜெயவர்த்தனா வெற்றி 45

...இது சிலருக்குப் பிடிக்கவில்லை. இருந்தபோதிலும் பிரபாகரனின் விருப்பம் என்பதற்காக ஏற்றுக்கொண்டனர்.

இதற்கிடையே யாழ்.நகர மேயர் ஆல்பிரட் துரையப்பா கொலை வழக்கை விசாரிக்க மூன்று பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை 1977 ஆம் ஆண்டு தொடக்கத்தில் அடுத்தடுத்து விடுதலைப்புலிகள் சுட்டுக்கொன்றனர். 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஒரு சந்திப்பு, அமிர்தலிங்கம் வீட்டில் நடந்தது. இதில் பிரபாகரன், உமா மகேஸ்வரன், நாகராஜா, பற்குணராஜா, பேபி சுப்பிரமணியம் ஆகியோர் பங்கேற்றனர்.




தமிழர்களுக்குச் சில தீர்வுகளை அளிக்க ஜெயவர்த்தன முன்வந்துள்ளார். எனவே, சிறிது காலத்திற்கு உங்கள் நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்வது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது.

ஜெயவர்த்தனவின் நேர்மையைப் பரிசோதிப்பதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஒரு வாய்ப்பைத் தாருங்கள் என்று அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டார்.

அவர்கள் பேசுவதை விடுதலைப்புலிகள் அமைதியாகக் கேட்டபடி அமர்ந்திருந்தனர். பிரபாகரன் வேறு சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

### கட்சி தாவிய தமிழ் எம்.பி

இந்த நிலையில் அம்பாரை பகுதியில் உள்ளபொட்டுவில் தொகுதி வேட்பாளர் திடீரென்று இறந்துவிட அந்தத் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக கனகரத்தினம் போட்டியிட்டார்.

தமிழ் ஈழத்திற்கு ஆதரவாக பிரசாரம் செய்து வெற்றி பெற்ற அவர் டிசெம்பர் 19 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சிக்குத் (ஜெயவர்த்தன கட்சி) தாவினார்.

மேலும் அவர், “தமிழர்களுக்கு ஜெயவர்த்தன நல்லது செய்வார்; தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிழக்குப் பிராந்திய மக்கள் வாக்களித்து இருந்தாலும் தமிழ் ஈழத்துக்கான வாக்காக அதைக் கருதக்கூடாது” என்று தெரிவித்தார்.

கட்சி தாவிய கனகரத்தினம் தமிழ் இனத்துரோகியாகக் கருதப்பட்டார். அவரைத் தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டப்பட்டது. அவரது நடவடிக்கைகளை உமா மகேஸ்வரன் உன்னிப்பாகக் கவனித்து வந்தார்.

அதன்பிறகு பிரபாகரனுக்குத் தகவல் அனுப்பினார். 1978 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி இரவு பிரபாகரன் யாழ்ப்பாணத்திலிருந்து ரெயிலில் புறப்பட்டார்.

மறுநாள் காலை அவரைக் கொழும்பு கோட்டை ரெயில் நிலையத்தில் உமா மகேஸ்வரன் வரவேற்றார்.

ரெயில் நிலையத்திற்கு எதிரே உள்ள ஒரு ஓட்டலில் காலை உணவு சாப்பிட்டனர். அங்கிருந்து கொல்லுப்பிட்டியவுக்குப் பஸ் ஏறினார்கள். அங்குதான் கனகரத்தினத்தின் வீடு இருந்தது.

### சுட்டுக்கொலை

காலை 9 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்ட கனகரத்தினத்தைப் பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் துப்பாக்கியால் சுட்டனர.

குண்டு பாய்ந்ததில் காயமடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்த அவர், ஒரு உயரமான பையனும் ஒரு குட்டையான பையனும் என்னைச் சுட்டனர் என்று வாக்குமூலம் அளித்தார்.

கனகரத்தினத்தைச் சுட்ட பிறகு உமாமகேஸ்வரன் கொழும்பிலேயே தங்கினார். பிரபாகரன் யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டார். துப்பாக்கியால் சுடப்பட்ட சில வாரங்கள் கழித்து கனகரத்தினம் மரணம் அடைந்தார்.

### சபதம்

2 தமிழ்த் தீவிரவாதிகள் கொழும்பு நகருக்கே வந்து பாராளுமன்ற உறுப்பினரைத் துப்பாக்கியால் சுட்டிருக்கிறார் என்பதை ஜெயவர்த்தன வால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.




(தொடரும்)

# பிள்ளைப்பருவ மனவெழுச்சிகளை கல்வியின் மூலம் மாற்றுத்திறனாக இனங்கண்டு வெற்றிகொள்ள வேண்டும்

இவ உலக மனிதர்களின் வாழ்நாளில் பிள்ளைப்பருவம் என்பது அவனது முக்கியமான காலமாகும். இன்றைய இளைஞர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள் எனபதற்கு இணங்க ஒரு மனிதன் எதிர்காலத்தில் தலைவனாக, சமுதாய வளமாக தனக்கும் தனது நாட்டிற்கும் பயன்படக் கூடிய பிரஜையாக வளர பிள்ளைப்பருவ வாழ்க்கை முறையின் வழிகாட்டல்களே காரணமாகின்றன. இந்தப் பிள்ளைப்பருவம் மனிதர்களின் கல்வி கற்கின்ற பாடசாலைக் காலம் என்பதனால் பிள்ளைப்பருவ வளர்ச்சி சிந்தனை ஆற்றல்களை வளர்க்க பாடசாலை செயற்பாடுகளும் கல்வி வழங்கல் நடவடிக்கைகளும் மிக முக்கியமானவையாக விளங்குகின்றன. இதன் அடிப்படையில் இன்று உலகில் பிள்ளைகளின் சிறுவர் உரிமை சாசனத்தின்படி அவர்களின் உரிமைகளை செயல் வடிவில் வழங்குகின்ற பிள்ளை நேயப் பாடசாலை மற்றும் சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் பேதமின்றி (மாற்றுத்திறனாளிகள், சாதாரண பிள்ளைகள்) கல்வியினை வழங்க வேண்டும் என்ற 1994 ஆம் ஆண்டில் இருந்து உருவாக்கப்பட்ட உலகளாவிய உட்படுத்தற்கல்வி என்பன சகல பிள்ளைகளுக்கும் பாடசாலை கல்வியினை வழங்க வேண்டிய தேவையினை உணர்த்தி நிற்கின்றன. எனவே பாடசாலைப் பருவத்தில் எல்லாப் பிள்ளைகளுக்கும் சீரான கல்வியினை வழங்க வேண்டிய பொறுப்பு பெற்றோர் மற்றும் பாடசாலையின் கல்விச் சமூகம் என்பவற்றிற்கு பாரிய பொறுப்பு உண்டு எனலாம்.


ஆனால் இன்று உலகளாவிய ரீதியில் நவீன தொழில்நுட்ப சாதனங்களினை தவறாக பயன்படுத்தல் மற்றும் பொருத்தமற்ற கலாசார பண்பாடுகளினை பின்பற்ற முனைதல் என்பவற்றினால் பிள்ளைப் பருவத்தினரிடையே பல மனவெழுச்சி பிரச்சினைகளினை தோற்றுவித்துள்ளது. மனவெழுச்சி என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலை என்றும் இது ஒருவரை பாதிக்கும் நிலையில் அல்லது ஆர்வம் கொண்டுள்ள சூழ்நிலையில் மனிதரின் இயல்பாக தோன்றும் நிலை என்றும் இது தனியாட்களை வழிநடத்தும் சக்தி என்றும் கூறுவர்.

இது நேரான மனவெழுச்சி, எதிரான மனவெழுச்சி போன்ற இரு நிலைகளில் தோன்றுகின்றன. இவற்றினை இனங்கண்டு வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு.



இந்த மனவெழிச்சியின் அடையாளங்களாக அதிகப்படியான கோபம், வெறுப்பு, வன்முறையில் ஈடுபடல், எதிரான சிந்தனைகள் என்பவை தோன்றுகின்றன. இதன் விளைவாக தற்கொலை, களவு, கொலை செய்தல், போதைப்பொருள் பாவனை, மதுவுக்கு அடிமையாதல், வன்செயல்களில் ஈடுபடல், பெரியோர்களை மதிக்காமை, சமயஒழுக்க விழுமியங்களை மீறுதல் போன்ற கலாசார பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது வாழ்க்கையினை சீரழிக்கின்ற நிலை பிள்ளைப்பருவத்தினரிடையே ஏற்படுகின்றது. இந்த நிலையானது எமது பிரதேசத்திலும் அதிகமாக தோன்றி வருகின்ற நிலை காணப்படுகின்றது. எனவே எதிர்காலத்தில் வளமான சமுதாயத்தினை உருவாக்கி வளமான நாடாக மிளிர வைக்க இன்றைய பிள்ளைப் பருவத்தினரின் மனவெழுச்சி பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டிய தேவை பிள்ளைகளின் பெற்றோர்கள் முதல் சமுதாயத்தின் ஒவ்வொருவருக்கும் உண்டு எனலாம். இந்த நிலையில் இவர்களை வழிப்படுத்துவதில் கல்வி முக்கியமானது என உணரப்பட வேண்டும். எனவே இதனை வழங்குகின்ற கல்விச்சாலைகள் முக்கிய இடமாக திகழ வேண்டும்.

இன்று உலகளாவிய ரீதியில் சாதாரணமான கற்றல், கற்பித்தல், நடவடிக்கைகளுடன் விசேடமான முறைகளை கொண்ட விசேட கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. இத்தகையை கல்விச் செயற்பாடுகளில் ஏதோ ஓர் அடிப்படையில் பாதிக்கப்பட்டு பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளவர்கள் கல்வியின் மூலம் அவர்கள் சீர்படுத்தப்படுவதுடன் அவர்களிடம் காணப்படும் விசேடமான மாற்றுத்திறனும் வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே ஒவ்வொரு மனிதனிடமும் விசேடமான மாற்றுத்திறன் காணப்படும். இது சாதாரண பிள்ளைகள், விசேடதேவைகளையுடைய பிள்ளைகள் போன்ற எல்லோரிடமும் காணப்படும். அதனை இனங்கண்டு வழிப்படுத்த வேண்டும். இதற்காக மாற்றுத்திறனாளிகளை சமுதாயத்தில் மேம்படுத்தும் நோக்கோடு சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. எனவே இன்று மாற்றுத்திறனாளிகள் சர்வதேச ரீதியில் வழிப்படுத்தப்பட்டு வரப்படுகின்ற நிலையில் சாதாரண பிள்ளைகளிடம் ஏற்படுகின்ற மனவெழுச்சி பிரச்சினைகள் சவாலாககாணப்படுகின்றன. இதனை தீர்ப்பதற்காக எல்லோரும் முன்வர வேண்டும். இத்தகைய மனவெழுச்சி பிரச்சினைகள் பிள்ளைகளிடம் தென்பட்டால் அதற்கு உரியவாறு விரைவாக தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையாயின் அம் மனவெழுச்சி பாரிய பின் விளைவுகளினை ஏற்படுத்திவிடும். இதனால் பிள்ளைகளின் எதிர்காலமே பாதிப்படைந்துவிடும்



மேற்போன்ற மனவெழுச்சி பிரச்சினைகளை வெற்றி கொள்ள சகல பிள்ளைகளிற்கும் சீரான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதுடன் அதனை மாணவர்கள் உரிய முறையில் பெறுகின்றனரா? எனவும் அதனைப் பின்பற்றி நடக்கின்றனரா? எனவும் மேற்பார்வை செய்ய வேண்டும். இதில் பெற்றோர்களின் பங்களிப்பு அவசியம் தேவைப்படுகின்றது எனலாம். மேலும் மனவெழுச்சி பிரச்சினையை குறைத்துக் கொள்ள பாடசாலைகளில் நடைபெறுகின்ற இணைப்பாட விதான செயற்பாடுகளான விளையாட்டுக்கள், விழாக்கள், போட்டிகள், கல்விச்சுற்றுலாக்கள், சமய நிகழ்வுகள் என்பவற்றில் பிள்ளைகளை ஈடுபடுத்த வேண்டும். போட்டிகளில் பங்குபற்றி அதில் வெற்றி பெற்று தனக்கும் தனது குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் பெருமையை தேடிக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் அதனை அடைவதற்கான வழி வகைகளினை கண்டு அதனை அடையும் சிந்தனைகளில் பிள்ளைகள் தம்மை மாற்றிக் கொள்வார்களானால் தமது எதிர்மறையான சிந்தனைகளை பிள்ளைகள் குறைத்துக் கொள்வர். மேலும் மனிதனை வழிப்படுத்துகின்ற சமய ஒழுக்காறுகள், அறநெறிப் பண்புகள் என்பவற்றை கடைப்பிடித்து வாழ வேண்டும். இதற்காக சமய போதனைகள், சமயம்சார் விழாக்கள், நிகழ்வுகள் என்பவற்றை அதிகரிக்க வேண்டும். அதுமட்டுமன்றி அதில் பங்குபற்றுதல், அதன் விழுமியங்களை பின்பற்றி நடத்தல் போன்ற பண்புகளினை வளர்த்தல் வேண்டும்.

அதுமட்டுமன்றி உலகின் எதிர்கால சவால்களை எதிர்கொண்டு பல்வேறு சாதனைகளினை படைக்கக் கூடிய மனிதனாக மாறுவதற்கு கல்வி பெறுதல் என்பது அவசியமாகின்றது. எனவே ஒவ்வொரு பிள்ளையும் கல்வி கற்று தம் வாழ்வினை மேம்படுத்துவதுடன் நாட்டின் பெறுமதிமிக்க மனிதவளமாக திகழ வேண்டும்என்ற மனவிருத்தியினை ஒவ்வொரு பிள்ளைகளிடமும்ஏற்படுத்த வேண்டும். 'கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பதனை ஒவ்வொரு பிள்ளையும் மனதில் நிலைநிறுத்த வேண்டும்.

மேலும் பிள்ளைகளிடையே தனியாள் வேறுபாட்டிற்கு அமைய பல்வேறு திறன்கள் காணப்படும். அதனை வெளிக்கொண்டு வந்து முன்னேற்றம் அடைய வைக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் பிள்ளைகள் செயற்பட வேண்டும். எனவே இன்றைய தினம் பிள்ளைகளின் மனவிருத்தியுடன் மாற்றுவலுக்களை இனங்கண்டு மிளிரச் செய்து அவர்களை அறிவு விருத்தியும், பண்பு விருத்தியும் கொண்டவர்களாக மாற்ற எண்ணுவோம்.

இர.ஜெயகரன்
விசேட கல்வி
ஆசிரியர்
கிளி/ பூநகரி மத்திய
கல்லூரி.

# செய்தித் துளிகள்

## ஒயிலைக் காட்டி மதுபானம் விற்பனை செய்தவர் மாட்டினார்

வெலிகம பிரதேச வர்த்தகர் ஒயில் விற்பனை நிலையம் எனப் பொதுமக்களுக்கு பாசாங்கு காட்டி மதுபான விற்பனையில் ஈடுபட்டுள்ளார். தனக்கு நம்பிக்கைக்குரியவர்களுக்கு இவ்வாறு மதுபானம் விற்பனை செய்து வந்துள்ளார்.

சந்தேகம் கொண்ட பொலிஸார் இவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைத்துள்ளனர். (இ-10)

## சிறுவர் தொழிலாளர்களை இல்லாமல் செய்ய முயற்சி

சிறுவர் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில் இலங்கையில் 2016 ஆம் ஆண்டளவில் சிறுவர் தொழிலாளர்களை முற்றாக இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிரந்தர பிரதிநிதி டோங்லி தெரிவித்தார்.

சிறுவர்கள் வீட்டு வேலைகளுக்கும் வேறு வேலைகளுக்கும் அமர்த்தப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பாக அவர்களுக்கு தொழில்நுட்ப அறிவையும் மாற்றுவசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

சிறுவர் தொழிலாளர்களை முற்றாக இல்லாது செய்யும் பொருட்டு கொள்கையொன்று உருவாக்கப்பட வேண்டுமெனவும் சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை மேற்கொள்வதோடு சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது எனவும் இவ்வாறு சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

## பணியாட்களை அனுப்பக்கூடாது அஜித் பீ.பெரேரா வலியுறுத்து

சவுதி அரேபியாவிற்கு பணிப் பெண்கள் அனுப்பப்படுவதனை உடனடியான நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மின்சக்தி பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பணியாட்களுக்கு குறைந்த சலுகைகளே வழங்கப்படுகின்றமையினால், அந்த நாடுகளுக்கு பணியாட்களை அனுப்பும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

அதற்கு தேவையான சட்டம் பாராளுமன்றத்தில் வகுக்கப்பட வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார். (இ-7-10)

## முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

நாரஹேன்பிட்டி பொலிஸ நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி உப்புள் தம்மிக இன்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 25 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இச்சம்பவம் தொடர்பாகவே அண்மையில் உப்புள் தம்மிக அம்பாறை பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் போலி ஆவணம் ஒன்றைதயாரித்தன்பொருட்டு 75 இலட்சம் ரூபா இலஞ்சம் கோரி 25 இலட்சம்ரூபா இலஞ்சம் பெற்றமைக்காக அவர் கைது செய்யப்பட்டுளளார்.

நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவின் உப பரிசோதகர் சுகதபால உள்ளிட்டோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## மழலைகளின் கலைவிழா

கல்வயல் தேனியா மழலைகள் கல்வி பூங்காவின் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேனியா முன்பள்ளி முகாமைத்துவ குழுத் தலைவர் ம.சுபாகரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சரோஜாதேவி அரியநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-29)

# தமிழ்த் தலைமைகளின் இராஜதந்திரம் சாதனையா? வேதனையா?

மனித நாகரிகம் தோன்றிய காலந் தொட்டே மனிதர்கள் விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள். அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிராக, பல்வேறு வடிவங்களில் யுகம் யுகமாக விடுதலைப் போராட்டங்கள் நிகழ்ந்து வந்துள்ளன.

உலகில் அநீதியும் அடக்குமுறையும் தொடரும்வரை விடுதலைப் போராட்டங்களும தொடர்ந்த வண்ணம்தான் இருக்கின்றன.

ஒடுக்கப்படும் மானிட வர்க்கம் விடுதலையடையும் வரையில் ஏதோவொரு வகையில் போராடிக்கொண்டிருப்பதுதான் மனித வரலாற்று யதார்த்தமாகவிருக்கின்றது.

தேசிய இனமாகவிருந்தும் உரிமைகளுக்காகவும் அபிலாஷைகளுக்காகவும் நீதி நியாயத்திற்காகவும் தற்போதும் போராடிக் கொண்டிருக்கும் தமிழினமும் மேற்குறிப்பிட்ட யதார்த்தத்திற்கு விதிவிலக்கில்லை. 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் துன்பியல் சம்பவம் நிகழ்ந்து ஆறரை ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன. அறுபது ஆண்டுகளாக பல்வேறு வடிவங்களில் போராடிக்கொண்டிருக்கும் தமிழ் மக்கள் ஆட்சி மாற்றம் நிகழும், விடியல் பிறக்கும், நிம்மதியான வாழ்க்கை மலரும் என்ற நம்பிக்கையுடன் ஒவ்வொரு பொழுதுகளையும் கடந்து வந்துகொண்டிருக்கின்றார்கள். அந்தவகையில் இவ்வருடம் ஜனவரி 8 ஆம் திகதியும் ஒரு மாற்றம் நிகழ்ந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனையற்ற ஆதரவுடன் புதிய ஜனாதிபதி அரியாசனமேறினார். தொடர்ந்து பொதுத் தேர்தலும் நடைபெற்றது. அதிலும் மாற்றம் நிகழ்ந்தது.

வரலாற்றுத் திருப்புமுனையாக பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரண்டும் இணைந்து தேசிய அரசாங்கத்தை ஸ்தாபிதனை. திக்கித் திணறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியானது. அரசாங்கத்திற்கு வெளியிலிருந்து கொண்டு நல்லெண்ணச் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்ப தாக அறிவித்தது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்து தற்போது 11 மாதங்கள் உருண்டோடி விட்டன. ஆட்சி மாற்றத்தால் மாற்றம் நிகழ்ந்துவிடுமென அதீத நம்பிக்கை கொண்டிருந்த தமிழினத்திற்காக எவ்வாறான விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்ற வினா முன்வைக்கப்படுமாகவிருந்தால், ஒரே வார்த்தையில் எதுவுமேயில்லை என கூறிவிடக் கூடிய நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறிருக்கையில், ஆயுதப்போராட்ட மௌனிப்புக்குப் பின்னர், தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆணை பெற்றவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர். ஆகவே, தமிழர்களின் எதிர்காலத்தை உறுதிசெய்ய வேண்டிய பாரிய வகிபாகம் அவர்களிடத்திலேயே உள்ளது என்பதை மறுதலிக்க முடியாது. சர்வதேச சமூகம் எம்முடன் இருக்கின்றது. எமது விடயங்கள் சர்வதேச சமூகத்தில் முதன்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவர்களின் துணையுடன் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு நிரந்தர தீர்வுக்கான இலக்குகளை அடைந்து விடமுடியும். அதுநோக்கிய கருமங்களை இராஜதந்திரமாக முன்னெடுக்க வேண்டுமென ஆணித்தரமாகக் கூறிவருகின்றார்கள்.

மூன்று தசாப்த ஆயுதப்போராட்டத்தால் விலை மதிப்பற்ற இழப்புக்களை தமிழ் மக்கள் சந்தித்திருக்கின்றார்கள். ஆகவே மீண்டுமொருமுறை அத்தகைய இழப்புக்கள் ஏற்படுமாயின் அது மேலும் தமிழ் மக்களை பலவீனப்படுத்துவதாகவே அமையும். அந்த அடிப்படையில் உரிமைகளையும் அபிலாஷைகளையும் வென்றெடுப்பதற்காக இராஜந்திரமான அணுகுமுறைகளை அல்லது நகர்வுகளைக் கையாள்கின்றோம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவிருக்கின்றதில் தவறொன்றுமில்லை. எனினும் சர்வதேசத்தின் துணையுடன் இராஜதந்திரமாக நகர்வுகளைச் செய்கின்றோம் அல்லது அணுகுமுறைகளை மேற்கொள்கின்றோம் என பகிரங்கமாகவே தெரிவிக்கப்பட்டுவிட்டது.

அந்நிலையில் மலர்ந்திருக்கும் புதிய ஆட்சியில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழமைவுகளை சற்றே ஊடுருவிப் பார்க்கையில் இராஜ தந்திரமான நகர்வுகளை, அணுகுமுறைகளை வெற்றிகரமாக மேற்கொண்டிருப்பது அந்த வார்த்தைகளை கூறியவர்கள் அல்ல. மாறாக, பெரும்பான்மைவாத ஆட்சியாளர் களே என்பது கசப்பானதாக இருந்தாலும் தற்போதாவது ஏற்றுக்கொள்ளவேண்டித்தான் உள்ளது.

ஆம், பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை 1948 களில் சுதந்திரம் பெற்றிருந்தது. எனினும் பெரும்பான்மைவாத ஆட்சியாளர்கள் அவர்களிடத்திலிருந்த பிரித்தாளும் தந்திரத்தையும் முறையாக பயின்றிருந்தார்கள். உள்நாட்டில் சிங்கள பௌத்த வாதத்தை விதைத்து இந்த நாட்டை சிங்களபௌத்த நாடாக கட்டியெழுப்புவதற்காக பிறிதொரு தேசிய இனமான தமிழினத்தை அடக்கியாளவேண்டுமென்ற திடசங்கற்பம் பெரும்பான்மைவாதிகளால் எடுக்கப்பட்டுவிட்டது.

அதனை தீர்க்கதரிசனமாக உணர்ந்து தனது உரிமைகளுக்காகவும், அபிலாகைளுக்காகவும் போராட்டத்தை தமிழ்த் தேசிய இனம் ஆரம்பித்திருந்தது. அகிம்சை ரீதியாகவோ அல்லது ஆயுத ரீதியாகவோ போராட்டங்களின் வேட்கை வலுக்கும்போது பிரித்தாளும் தந்திரத்தை மிகச்செவ்வனே பயன்படுத்தி வந்துள்ளார்கள் பெரும்பான்மைவாத ஆட்சியாளர்கள்.

ஆரம்பகாலத்தில் ஒப்பந்தங்களை செய்து கொண்டு சிறுநம்பிக்கையளிப்பதும் பின்னர் அவற்றை கிழித்தெறிவதுமாக இருந்த பெரும்பான்மைவாத ஆட்சியாளர்கள் 1980 களில் ஆயுதங்களுடன் எழுச்சி கொண்ட இளைஞர்களை குழுக்களாகப் பிரித்து, உள்ளக முரண்பாடுகளை வலுப்படுத்தியிருந்தனர். குறிப்பாக இதனால்சகோதரப்படுகொலைகளும் ஒருவரையொருவர் காட்டிக்கொடுக்கும நிலைமையும் நீடித்த வரலாறுகளே எம்மத்தியில் உள்ளன.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் போராட்டங்களை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளும், நம்பிக்கையளித்து ஏமாற்றும் செயற்பாடுகளும் அதியுச்சத்தில் காணப்பட்டிருந்தது. அதன் பின்னரான காலத்தில் அவ்வாறான நிலைமைகள் சிறியளவில் குறைந்திருந்தன. மீண்டும் அவ்வாறான நிலைமைகள் 2001 ஆம் ஆண்டளவில் வலுவடைந்தன. காரணம் மாமனாருக்கு ஒருபடி மேல்சென்று சிந்திக்குமளவிற்கு மருமகனான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணப்பட்டிருந்தார்.

பிரதமர் ஆசனத்தில் அமர்ந்திருந்த ரணில விக்கிரமசிங்க காலத்தில் சமாதான ஒப்பந்தம், ஒஸ்லோ பேச்சுவார்த்தை ஆகிய நம்பிக்கையளிக்கும் வகையிலான விடயங்கள்




அரங்கேறியிருந்தன. அதன் தொடர்ச்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா அம்மான் பிளவடைந்து சென்றார்.

அந்தப்பிளவுக்கு நானே முழுமையான காரணம். யுத்த வெற்றிக்கு புள்ளி வைத்ததும் நானே என பகிரங்கமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். அத்தகையவர் இன்று மீண்டும் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டிருக்கின்றார். நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நிரந்தர தீர்வளிக்கும் ஒரு தலைவராக நம்பிக்கையளிக்கும் அவதாரமாக காட்டி நிற்கின்றார்.

ஆனால் திரைமறைவில் பெரும்பான்மைவாத ஆட்சியாளர்கள் படிப்படியாக மேற்கொண்டு வரும் இராஜதந்திர காய்நகர்த்தல்கள் நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படு த்தி நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திரத்தை விஞ்சிவிட்டதோடு மட்டுமன்றி தமிழ் மக்களின் கோரிக்கைகளை நலிவடையச் செய்யும் நிலையிலேயே உள்ளது.

முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வடக்கிலிருந்து ஒரு இராணுவ வீரர்கூட அகற்றப்படமாட்டார். மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவோ யுத்தக் குற்றங்கள் தொடர்பாக இராணுவ வீரர்களை விசாரணை செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். சர்வதேச விசாரணையை நடத்த முடியாதென பகிரங்க அறிவிப்பை விடுத்திருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி அரியாசனத்தில் அமர்த்தியது. சர்வாதிகார ஆட்சியாளர்களை அரயாசனத்திலிருந்து அகற்ற வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக அந்த முடிவை எடுத்ததாகவும், மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக வாய்மொழியாக வழங்கிய உறுதிமொழிகளும் இவ்வாறான நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதற்கான காரணங்களாக கூறப்பட்டன.

அதன் பின்னர் 2015 ஒகஸ்ட் 17 இல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய இலங்கைக்குள் அதியுச்ச அதிகாரப்பகிர்வே இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வாகப் பெற்றுக்கொள்வதற்கான, முடிந்த முடிவு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் கூறியது. வடக்கு, கிழக்கு இணைப்போ அல்லது சமஷ்டி, சுயநிர்ணயம் ஆகியவற்றை ஏற்கமுடியாதென ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏறக்குறைய ஒரே வகையிலான கருத்தை வெளிப்படுத்தியிருந்தன. கூட்டாக ஆட்சியமைத்தனர். வடகிழக்கு இணைப்பு, சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி முறையில் நிரந்தர தீர்வு என்ற தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு கிடைத்த ஆணையுடன் பிரதான எதிர்க்கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமர்ந்தது.

அரசாங்கத்திற்கு வெளியிலிருந்து கொண்டு நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தப் போவதாகவும் குறிப்பிட்டது. சர்வதேச சமூகத்தினால் அரவணைக்கப்படும் நிலையில் புதிய ஆட்சியாளர்கள் இருக்கின்ற வேளையில், நல்லெண்ண சமிக்ஞையை கூட்டமைப்பு வெளிப்படுத்தி நிற்பதும்கூட ஒரு இராஜதந்திரமாக இருக்கலாம் எனக் கொள்ள முடியும். ஆனால் தற்போது நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திரம் நீர்த்துப்போய்விட்டதென்றே கொள்ள வேண்டியிருக்கின்றது. அதற்கு காரணங்கள் இல்லாமலில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 30 ஆவது கூட்டத்தொடரின் போது எதிர்க் கட்சித் தலைவர் பதவி, பிரதம நீதியரசர் பதவி ஆகியவற்றை நல்லிணக்கத்தின் அடையாளங்களாக காட்டிய அரசாங்கம், வாக்குறுதிகளை அள்ளி வழங்கியது. அதனை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டது. அதன் விளைவுதான் ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையின் காரத்தின் செறிவு குறைக்கப்பட்டு அமெரிக்காவின் துணையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மண்ணிலிருந்து யதார்த்தத்தை உணர்ந்து சர்வதேச விசாரணை வேண்டுமென கூறியவர்கள் அங்கு சென்று என்ன செய்தார்கள் என்பது யாருமறியாத நிலையில் உள்ளனர்.

அரசாங்கமே கையொப்பமிட்டு ஏற்றுக் கொள்ளுமளவிற்கு தீர்மானம் காணப்படுகின்றதென்றால் அதன் வலு எந்த நிலையில் இருக்கும் என்பதை அனைவருமே உணர்ந்துவிட்டனர். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியை பெற்றுக் கொண்டு அதன்பால் இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை எட்டுவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தமளிக்கும் மிகப்பெரும் பிடியாகக் காணப்பட்ட மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பான விடயங்கள் நீர்த்துப்போயுள்ளன. உண்மையிலேயே ஜெனீவா கூட்டத்தொடர் நடைபெறவுள்ளதென்பதும் இத்தகைய அதிமுக்கிய விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படவுள்ளதென்பதும் உலகறிந்த விடயம். (தொடரும்)

**பிரம்மாஸ்திரன்**

நம்பிக்கையான கனவுகளில் இருந்து தான் பொறுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
- டயானா ஹைடன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தத்தளிக்கும் தமிழக மக்களுக்கு ஈழத்தில் இருந்து அழு கண்ணீருடன்...

**அன்புமிகு தமிழக மக்களுக்கு!**

தமிழகத்தில் வரலாறு காணாத மழையால் சென்னை மாநகர மக்கள் பெருவெள்ளத்தில் தத்தளிக்கும் செய்தி அறிந்து தாங்கொணாத் துயரம் அடைகின்றோம்.

ஈழத்தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சகோதர உறவுகள் படும் துயரம் கண்டு நாம் கண்ணீர் விடாமல் இருக்கமுடியாது. இயற்கையின் சீற்றம் சென்னையை துவம்சம் செய்வது கண்டு எங்கள் இதயம் நொந்து போயிற்று.

இயல்பு வாழ்க்கையின் பாதிப்பு என்பதற்கு அப்பால், தங்களுக்கு ஏற்பட்ட உறவுகளின் உயிரிழப்புகளும் மிகப்பெரும் சொத்தழிவுகளும் ஈடு செய்ய முடியாத இழப்புகள் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

என்ன செய்வது? தமிழ் மக்கள் என்றால் இயற்கைக்கும் இறைவனுக்கும் அடிக்கடி ஆத்திரம் வந்து விடுகிறது. அதனால் இயற்கையின் சீற்றத்திற்கு நாங்கள் ஆளாக வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அன்புக்குரிய சென்னை மாநகரின் சகோதரர்களே! உங்கள் அவலநிலை கண்டு நாம் அழுவதைத் தவிர வேறு எதைத்தான் எங்களால் செய்ய முடியும்.

அகழ்வாரையும் தாங்கும் நிலமகள் பெருவெள்ளத்தையும் தாங்க நினைத்ததால், உங்கள் போக்குவரத்துப் பயணங்கள்; மின்சார வசதிகள்; மருத்துவ சேவைகள் என அனைத்தும் செயல் இழந்து போயின என்ற செய்திகளுக்கு அப்பால்,

**உயர்ந்த மாடிக் கட்டிடங்களில் நின்று ஒருவேளை உணவுக்காக உலங்குவானூர்திகளை நீங்கள் அண்ணாந்து பார்ப்பது கண்டு எங்கள் கண்கள் நிலம் நோக்கி கண்ணீர்ப் பாரத்தை இறக்கிக் கொள்கின்றன.**

ஓ நிலமகளே! எங்கள் கண்ணீர் மீது நீ கொண்ட காதலால்தானோ எம் தமிழக உறவுகளை தண்ணீரில் தத்தளிக்க வைக்கின்றாய்?

வரலாறு காணாத பெருவெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் தமிழக உடன் பிறப்புக்களே! நாங்கள் ஈழத் தமிழர்கள். எங்களிடம் ஆட்சியுமில்லை; அரசுமில்லை. வைகை நதி பெருக்கெடுத்த போது அணை கட்ட வக்கற்று நின்ற செம்மணச்செல்வியின் நிலைமையில்தான் நாங்களும் இலங்கையில் இருக்கின்றோம்.

செம்பகப் பெருமானே! வைகை நதி பெருக்கெடுத்த போது, செம்மணச்செல்விக்காக அணை கட்ட வந்து உதவியது போல தமிழக மக்களுக்கும் உன் உதவியைக் கொடு. அவர்களை பெருவெள்ளத்தில் இருந்து மீட்டுப் பாதுகாத்து விடு. செம்மணச் செல்வியின் நிலைமையில் நிற்கும் ஈழத்தமிழினம் உன்னிடம் இதையே வேண்டி நிற்கும். இதைத் தவிர வேறு நாங்கள் எதைத்தான் செய்ய முடியும்.

15 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் பெறுமதியான சொத்துக்களை பெருவெள்ளம் தின்று தீர்த்தது என்ற உங்கள் புள்ளி விபரம் கண்டு விறைத்துப் போனோம். இறைவா! ஈழத்தமிழினத்தின் ஒரே பலமாகிய தமிழக மக்களைக் காப்பாற்று.

இயற்கையின் சீற்றத்தை தணித்து அவர்களின் வாழ்க்கை இயல்புக்குத் திரும்ப உதவி செய். பெருவெள்ளத்தின் தொடராகப் பரவ இருக்கும் தொற்று நோய்த் துயரத்தைத் கட்டுப்படுத்த நீயே கருணைபுரி.

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, வட்டக்கச்சி, தச்சன் வீதியிலுள்ள மரப்பட்டறை ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

மரம் அரியும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, இவர் மீது மின்சாரம் பாய்ந்துள்ளது. இவரை மீட்ட உறவினர்கள் உடனடியாக அவரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால், அவர் ஏற்கெனவே உயிரிழந்திருந்தமை வைத்தியசாலையில் உறுதிப்படுத்தப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் க.ரவிச்சந்திரன் தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ந)

## மண்வளம் தொடர்பாக விசேட கருத்தமர்வு

ஆண்டுதோறும் டிசம்பர் 5ஆம் திகதி உலக மண் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதைக் கடைப்பிடிக்கும் நோக்குடன், வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஒருநாள் விசேட கருத்தமர்வு ஒன்றை இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விடுதியின் சங்கிலியன் மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

'மண் - உயிர் வாழ்வதற்கான திடமான தளம்' என்ற கருப்பொருளில் நிகழவுள்ள இக்கருத்தமர்வை வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆரம்பித்துவைக்க உள்ளார்.

வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ள தொடக்க அமர்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், உணவு விவ்சாய நிறுவன திட்ட இணைப்பாளர் ச.பார்த்திபன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (இ-7-9-10)

## வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான கருத்தரங்கு

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நாடுபூராகவும் நடத்தப்படவிருக்கும் வலைப் பந்தாட்ட A,B,C தர நடுவர்களுக்கான பரீட்சையை முன்னிட்டு வடமாகாண பரீட்சார்த்திகளை இப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி முதல் பி.ப 4 மணி வரை புனித யாகப்பர் பெண்கள் பாடசாலையில் கருத்தரங்கு ஒன்று நடத்தப் படவுள்ளது. (இ-7-10)

## தமிழக மக்களுக்கு உதவ அவசர கலந்துரையாடல்

### நாளை கைதடியில்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது குறித்த அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபை பேரவைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளதாக அதன் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த ஐந்து நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக தமிழகம் முழுவதுமாக பெருவெள்ளக்காடாகி, மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியமை மிகுந்த வேதனைக்குரிய விடயமாகும்.

எமது மக்கள் சந்தித்த அத்தனை அனர்த்தங்கள், இழப்புகள், பாதிப்புகள எல்லாவற்றிலும் எமக்கு ஆதரவாக நின்ற தமிழ் மக்கள் சந்தித்த இந்த பேரிழப்புக்கு எம்மாலான உதவிகளை மேற்கொள்வது எமது தார்மீக பொறுப்பும் கடமையுமாகும்.

எனவே இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அவசர கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றுள்ளது. (எ-4)

## முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கல் ஆரம்பம்

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சினால் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மற்றும் உயிரிழந்த போராளிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் திட்டம் ஆரமபிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் கிராம அபிவிருத்தி அமைச்சினால் வாழ்வாதார உதவி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது

அந்த வகையில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட வாழ்வாதார செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்ட செயற்திட்டமாக புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மற்றும் உயிரிழந்த போராளிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இத் திட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 147 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ஐம்பது ஆயிரம் பெறுமதியான வாழவாதார உதவித்திட்டம் வழங்கப்பட்டு வருகின்றது

அந்த வகையில் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் - நாவலர் வீதியில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்திலும் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10 வவுனியா - கிராம அபிவிருத்தி மண்டபத்திலும எதிர்வரும் 11 ஆம் திகதி மாலை 2 மணிக்கு முல்லைத்தீவு - கரைத்துறைப்பற்று பிரதேச செயலக மண்டபத்திலும் எதிர்வரும் 12 ஆம் திக்தி காலை 10 மணிக்கு கிளிநொச்சி - க்ரைச்சி பிரதேச சபை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது

எனவே அந்தந்த கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் அறிவித்தல் வழங்கப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-2-9-250-281)

JSAC
**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்**
**யாழ்.சமூக செயற்பாட்டு மையம்**
**(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)**
16
2014
ஊடகங்களே உங்கள் ஊதியத்திற்காய் பெண்களை ஊனமாக்காமல் ஓர் புகழ்ந்திட உத்தமமான கருத்துக்களால் ஊக்கம் கொடுத்திடுவீர் பெண்ணியம் வாழ.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



இந்தியாவின் உண்மையான வரலாறு வெளிப்படும் போது மதத்தில் போலவே நுண்கலைகளிலும் உலகின் முதற்குரு இந்தியாவே என்பது நிரூபிக்கப்படும்.

நான் கடவுள் என்றால் என் ஆன்மா அந்தக் கடவுள் உறையும் கோயில். எனது ஒவ்வோர் அசைவும் அவருடைய வழிபாடு- பிரதிபலனைக் கருதாமலும் தண்டனைக்கு அஞ்சாமலும் அன்பிற்காகவே அன்பு மலரவேண்டும். கடமைக்காகக் கடமை திகழ வேண்டும். அகவே எங்கள் மதம் விரிவைச் சுட்டி நிற்கிறது. விரிவு என்றால் வெறும் சொற்களை முணுமுணுப்பதல்ல, மண்டியிட்டுத் தொழுவதுமல்ல. அது அநுபூதி, நிறைநிலை. மனிதன் தெய்வமாக வேண்டும். தெய்வீகத்தை மென்மேலும் உள்ளே உணர்ந்து இடைவிடாது முன்னேற வேண்டும்.

உண்மையான மதம் ஆக்கபூர்வமானது. எதிர்மறையானது அல்ல. தீமை செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது. தொடர்ந்து உயர்ந்த செயல்களைச் செய்யவேண்டும் என்று உங்கள் பிள்ளைகளின் மனதில் பதிய வையுங்கள்.

தொலைதூர எதிர்காலத்தைப் பார்க்கும் எண்ணத்தின் ஆற்றலும் கடந்த காலத்தில் நடந்ததை நிகழ்காலத்தில் நினைவுக்குக் கொண்டு வருகின்ற ஞாபக சக்தியும் நம்மை வானுலகத்தில் வசிக்குமாறு செய்கின்றன. அதேவேளையில் அவை நம்மை நரகத்திலும் வசிக்கச் செய்கின்றன.

# டெங்குநோய் பற்றி அறிந்து கொள்வோம்

### நாம் ஏன் டெங்கு நோய் பற்றி அறிய வேண்டும்

இன்று எமதுநாட்டின் சகல பாகங்களிலும் இந்த டெங்குநோயின் தாக்கமானது பரவலாகக் காணப்படுகின்றது. நாமும் பல்வேறு தேவைகளின் நிமிர்த்தம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிற்கும் சென்று வருகின்றோம். இதனால் நாம் செல்லுமிடங்களிலும் இந்நோயின் தாக்கத்திற்கு ஆளாக நேரிடலாம். அத்துடன் எமது பிரதேசத்தில் அண்மையில் பெய்த பருவமழையைத் தொடர்ந்து டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதை வைத்தியசாலைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாகவும் நாம் இந்நோய் பற்றி அறிவதன் மூலம் நோய் வராமல் தவிர்க்க முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக இவ்டெங்கு நோயானது இறப்பினை ஏற்படுத்தக் கூடிய நோயாகவும் இருப்பதனால் நாம் கட்டாயம் இந்நோயைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

### டெங்குநோய் என்றால் என்ன?

டெங்குநோய் என்பது ஈடிஸ் (Aedes) எனும் நுளம்புவகையால் பரப்பப்படும் ஒருவைரஸ் தொற்று நோயாகும். வைரஸ் தொறறுக்குள்ளான பலர் எவ்விதநோய் அறிகுறிகளையும் வெளிப்படுத்த மாட்டார்கள். ஒருசிலருக்கு காய்ச்சல் ஏற்படுவதுடன் அதுபின்வரும் நிலைகளாக காணப்படும்.

வேறுபடுத்தப்படாத காய்ச்சல், டெங்குக் காய்ச்சல், டெங்குகுருதிப் போக்கு காய்ச்சல், அசாதாரண டெங்குக் காய்ச்சல்

### டெங்குகாய்ச்சல் ஏற்பட்டு இருப்பதாக நாம் எப்போது சந்தேகிக்க வேண்டும்

காய்ச்சலுடன் பின்வருவனவற்றுள் ஏதாவது அறிகுறிகள் ஒன்றோ அல்லது பலவோ காணப்படுமாயின் அது டெங்கு காய்ச்சல் என சந்தேகிக்கலாம்.

தலைவலி (கண்களிற்குப் பின்புறம்), உடல் வலி (தசைமற்றும் மூட்டு வலி),தோல் தடித்தல் (சிவப்புநிறம்),குமட்டல் அல்லது வாந்தி,முரசு, மூக்கு என்பவற்றிலிருந்து இரத்தக் கசிவு ஏற்படல்.

மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகளில் ஒன்றோ அல்லது பலவோ இருப்பின் கட்டாயமாகவைத்தியரிடம் செல்ல வேண்டும். நீங்கள் சென்று வந்த இடங்கள், நீங்கள் வசிக்கும் பகுதி (டெங்குநோய் காணப்படும் பகுதியாகவும் டெங்குநோயாளி வீட்டிற்கு அண்மையில் இருப்பதும்) என்பன இச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தும்.

### டெங்குநோய் எவ்வாறு பரவுகின்றது

ஈடிஸ் இன பெண் நுளம்பு மூலம் டெங்குநோய் பரவுகின்றது. ஈடிஸ் இன் பெண் நுளம்பானது டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் குருதியை உட்கொள்வதன்மூலம்டெங்கு வைரசை தனதுஉடலுக்குள் பெற்றுக் கொள்கின்றது. இவ்வாறு டெங்குவைரசைப் பெற்றுக் கொண்டபெண் ஈடிஸ் இன நுளம்பு சுகதேகி ஒருவரை கடிக்கும்போதுடெங்குவைரஸ் ஆனது சுகதேகிக்கு கடத்தப்பட்டு நோயினை உண்டாக்குகின்றது.

### ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டால் அவருக்கு டெங்கு நோய் ஏற்பட்டிருக்கலாம் என நினைப்பதுஏன் முக்கியமானதாகும்

டெங்கு நோயானது சாதாரண டெங்கு காய்ச்சல் முதல்டெங்கு குருதிப்போக்கு காய்ச்சல் போன்ற ஆபத்தான நிலைகளையும் ஏற்படுத்தக்கூடியது. காய்ச்சலின் ஆரம்பக்கட்டத்தில் டெங்கு காய்ச்சலையும், டெங்கு குருதிப்பெருக்கு காய்ச்சலையும் வேறுபடுத்துவது கடினம். சாதாரண டெங்கு காய்ச்சலானது பொதுவாக எவ்விதசிக்கல்களும் இன்றிகுணமடையும். ஆனால் ஆபத்தான நிலைமைகள் ஏற்படுமாயின் கட்டாயம் டெங்கு நோய்க்கு சிகிச்சை வழங் கக்கூடிய வசதிகள் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைபெறல் வேண்டும்.

### ஒருவருக்கு எத்தனை தடவைகள் டெங்குகாய்ச்சல் ஏற்படலாம

டெங்குவைரசில் நான்கு வகைகள் உண்டு. ஒருவருக்கு ஒருவகைவைரஸ் தொற்று ஏற்படுவதனால் அவ் வைரசுக்குஅவரின் உடலில் ஏற்படும் நோய் எதிர்ப்புத் தன்மை வாழ்நாள் முழுவதும் இருக்கும். ஆனால் ஏனைய டெங்கு வைரஸ் வகைகளால் இவர் தொற்றுக்கு ஆளாகலாம். தொடர்ச்சியாக வெவ்வேறு வகையான வைரஸ்களால் தொற்றுக்கு உள்ளாகும் போது (முக்கியமாக இரண்டாவது முறை) ஆபத்தான நிலைகள் ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துச் செல்லும்.

### டெங்கு குருதிப் போக்கு காய்ச்சல் என்றால் என்ன?

டெங்கு குருதிப் போக்கு காய்ச்சல் என்பது டெங்கு காய்ச்சலின் ஆபத்தான கட்டம் ஆகும். ஆயினும் இதன் நோய் அறிகுறிகளானது ஆரம்பக்கட்டத்தில் சாதாரணடெங்குக் காய்ச்சலைப் போன்றே இருக்கும். டெங்குகுருதிப் போக்கு காய்ச்சலின் போது குருதிச் சிறு தட்டுக்கள் குறைவடைவதுடன், குருதிப்பாயம் (பிளாஸ்மா) குருதிக் குழாய்களின சுவரினூடு வெளியேறி உட்குழிகளை அடைவது முக்கிய அம்சமாகும். இது பொதுவாக காய்ச்சல் ஏற்பட்டு மூன்றாவதுநாள் அல்லதுஅதற்குப் பின்பு ஏற்படுவதோடு இதைகுருதி எண்ணிக்கைப் பரிசோதனை மூலம்எதிர்வு கூறலாம். அல்லதுநோய் நிர்ணயம் செய்யலாம். இப் பிளாஸ்மா வெளியேற்றத்தைக் கண்டறிந்து தகுந்த சிகிச்சை வழங்காவிடின் டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படலாம். இவ் டெங்கு அதிர்ச்சி நிலையின் அபாய அறிகுறிகள் பின்வருமாறு.

கைகள் மற்றும் கால்கள் குளிர்தல்,சோர்வு, களைப்பு,அதிக தூக்கம்,பதற்றம், தலைச்சுற்றல், அதிகமான வயிற்றுவலி,தொடர் வாந்தி, குருதிப் போக்கு (முரசில் குருதிவெளியேறல், கருமை நிறமலம், குருதி கலந்த வாந்தி), சிறுநீர் வெளியேறும் அளவுகுறைதல் (6 மணித்தியாலத்திற்குமேல் சிறுநீர் வெளியேறாதிருத்தல்)

மேற்குறிப்பிட்டஆபத்துக் காரணிகள் இல்லாவிடினும் பின்வருவோர் கட்டாயம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவேண்டும்.

கர்ப்பிணிப் பெண்கள், உடற்பருமன் கூடியவர் கள், ஒருவயதிலும் குறைந்த சிறுவர்கள்,முதியவர்கள்

### டெங்குநோய்க் கட்டுப்பாடு

டெங்குக்காய்ச்சலை கட்டுப்படுத்துவதில் நோய்க் கட்டுப்பாடுஎன்பதுமிகவும் முக்கியமானதாகும். இது பின்வரும் வழிகளில் மேற்கொள்ளப்படும்.

### நோய்க் காவியின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்

நோய்க்காவியினை கட்டுப்படுத்துவதில் ஈடிஸ் இன நுளம்புகள் பெருகும் இடங்களை அழித்தல் மிகவும் சிறந்த முறையாக இருப்பதுடன் செலவு குறைந்ததாகவும் எல்லோராலும் இலகுவாகச் செய்யக் கூடியதொனறாகவும் உள்ளது.

### நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்கள்

எறியப்படும் பிளாஸ்டிக், கண்ணாடிப் பாத்திரங்கள், போத்தல்கள், ரின்கள், Shopping bags, ரயர்கள் கூரைப் பீலிகள்

### செய்ய வேண்டிய முகாமைத்துவம்

1.மீண்டும் பாவனைக்கு எடுத்தல், விற்றுப் பணமாக்கல், உரியமுறையில் அழித்தல், நீர் தேங்காதவாறு களஞ்சியப்படுத்தல்

2.ரயர்களில் மண்ணை நிரப்பிவிடல்,ரயர்களில் ஓட்டைபோடல், நீர்தேங்காவண்ணம் களஞ்சியப்படுத்தல்

3.பீலிகளில் சிறு துவாரங்கள் இடல், கிரமமான முறையில் இலை, குழைகளை அகற்றிசுத்தப்படுத்தல்.

4.நீர் தேக்கிவைக்கும் தொட்டிகளைவாரம் இருமுறை உரஞ்சிக் கழுவுதல், நீரிற்கும், நுளம்பிற்கும் இடையிலான தொடர்பு இல்லாமல் செய்வதற்கு நுளம்பு வலையால் தொட்டியை மூடிவிடல்.


5.பரல்கள்,பூச்சாடிகளை தொடர்ச்சியாக கண்காணித்து ஊற்றிவிடல்,சாடிகளில் துவாரங்களை ஏற்படுத்துதல்

6.இளநீர், தென்னங் கோம்பைகள் நான்கு துண்டுகளாக ஒவ்வொரு கோம்பையையும் வெட்டி பிளத்தல், கவிட்டுவிடுதல்

7.குளிர்சாதனப் பெட்டியில் நீர்தேங்கும் பகுதி(பின் பகுதி)வாரம் இருமுறை உரஞ்சிக் கழுவுதல்,நீர் தேங்கும் பகுதியினுள் சவர்க்காரத் துண்டுகளை இடல்

8.வாய்க்கால்களை அடைபடாமல் சுத்தம் செய்தல்

நோய்க் கட்டுப்பாட்டுநடவடிக்கையில் நுளம்புக் குடம்பிகளையும் கட்டுப்படுத்துதல் ஓர் சிறந்த முறையாகும். அதாவது நுளம்புக் குடம்பிகளை விரும்பி உண்ணும் கப்பீஸ் இன மீன்களை தண்ணீர் தொட்டிகள், கிணறுகள், குளங்கள் என்பவற்றில் விடுவதன் மூலம் இந் நுளம்புகளின் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியும். இக கப்பீஸ் இன மீன்களை சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.



நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் வளர்ந்த நுளம்புக் கட்டுப்பாடும் ஒருமுறையாகும். இவ் வளர்ந்த நுளம்புகளை அழிப்பதற்கு இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துவதனால் இதனை பெரிதாக விரும்புவதில்லை.

டெங்குநோய்க் கட்டுப்பாட்டில் நுளம்புக்கடியில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வதும் ஒருமுறையாகும். அதாவதுநுளம்புக் கடியில் இருந்து எம்மை பாதுகாப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்ற முடியும். சிறுவர்களுக்கு உடம்பினை மறைக்கக்கூடிய நீளமான உடைகளை அணிவித்தல்

வீட்டு யன்னல், கதவுகளுக்கு நுளம்புகள் உள்வராமல் திரைச்சீலை போட்டு மூடிவிடுதல்

இனம்காணப்பட்ட டெங்கு நோயாளியை குணமடையும் வரை நுளம்பு வலை கொண்டு மூடப்பட்ட கட்டிலில் படுக்கச் செய்தல்

மாலை நேர, காலை நேர கல்வி நிறுவனங்களுக்கு செல்லும்போது உடம்பின் முழுப்பகுதியையும் மறைக்கக்கூடிய உடைகளை அணிந்து செல்லுதல்

நுளம்பிற்கு ஒவ்வாமையான வெளிப்பூச்சுக்களை எமது உடம்பிற்குபூசுதல் (புல் எண்ணை, ஒடோமாஸ் கிறீம் போன்றன)

ஏனைய நுளம்பு இனங்களை விட இவ் டெங்கு நோயினைப் பரப்பும் ஈடிஸ் இன நுளம்புகள் சில விசேட குண இயல்புகளைக் கொண்டவை. எனவே அவை பற்றி நாம் அறிந்து வைத்திருப்பதன் மூலம் இந் நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு உதவ முடியும்.

அவையாவன,

01.இந் நுளம்பானது சிறியதும் மிகச் சுறுசுறுப்பானதுமாகும்.

02.இது தனதுகறுத்த உடலில் மனித கண்களுக்குப் புலப்படக்கூடிய வெள்ளை நிற அடையாளங்களையும், வளையங்களையும் தனதுகால்களில் கொண்டுள்ளது.

03. இது தெளிந்தநீர் நிலைகளில் (கிணறு, தொட்டிகள் உட்பட) மழைநீர், சாக்கடைநீர் போன்ற தேங்கி நிற்கும் இடங்களில் தனது இனப்பெருக்கத்தினைச் செய்கின்றது.

04.இந் நுளம்பின் ஆயுட்காலம் 02 - 04 வாரங்களாகும்.

05.இதன் வாழ் நாளில இது 3 அல்லது 4 தடவைகள் இவ்வாறு முட்டைகளை இடுகின்றது.

06.இந் நுளம்பானது ஒரேதடவையில் 100 - 200 முட்டைகளை இடுகின்றது.

07.இம முட்டைகள் ஒட்டும் தன்மை கொண்டவை.

இம் முட்டைகள் 06 - 12 மாதங்கள் வரை வறட்சி நிலையில் உயிர் வாழக் கூடியன.

08. இந் நுளம்புகள் அதிகாலை வேளையிலும் மாலை வேளையிலும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்குவதனால் இந் நேரங்களிலேயே மனிதனையும் கடிக்கின்றது.

09. டெங்குவைரஸ் ஆனது இந் நுளம்புகளின் முட்டைகளினூடாகவும் கடத்தப்படும் இயல்புடையதாகும்

10.இந் நுளம்புகள் முட்டை இடுவதற்குமிகவும் குறைந்தளவுநீர் போதுமானதாகும் (பழைய சோடா மூடியில் தேங்கும் நீரில் கூட முட்டைகளிடும்)

எனவேநாம் ஒவ்வொருவரும் இவ் டெங்குநோய் தொடர்பாகவும், இவ் டெங்கு நோயினைப் பரப்பும் ஈடிஸ இன நுளம்புகள் தொடர்பாகவும் அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் தொடர்பாகவும் அறிந்து அதனைச் செயற்படுத்துவதன் மூலமே எமதுபிரதேசத்தில் இவ் உயிர் கொல்லிடெங்கு நோயின்னை இல்லாது ஒழிக்க முடியும்.

**அ.ஜெயபாலன்**
சுகாதாரக் கல்வி அதிகாரி,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,
யாழ்ப்பாணம்.

## கடற்படை வாக...

தாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை எட்டு மணியளவில் நாரந்தனை பகுதியில் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்து சம்பவத்தினால் கடற்படைக்கும் பொது மக்களிற்கிடையில் யாழ்.போதனா வைததியசாலையில் முறுகல் நிலை காணப்பட்டது.

இவ்விபத்தில் வேலணை மேற்கு நடராச வித்தியாலயத்தில் தரம் பத்தில் கல்வி கற்கும் உதயகுமார் உஷாந்தினி (வயது 16) என்ற மாணவியே உயிரிழந்தவராவார். பிரஸ்தாப மாணவி நாரந்தனை வடக்கில் வசித்து வரும் நிலையில், நாரந்தனை-வேலணை ஊடாக வேலணையில் உள்ள பாடசாலைக்கு துவிச்சக்கர வண்டியில் சென்று வருவது வழக்கம்.

வழமைபோல குறித்த மாணவி பாடசாலைக்கென நேரத்துக்கே வீட்டிலிருந்து கிளம்பியுள்ளார். தற்போது மழை காலம் என்பதனால், நேற்றைய தினம் இவ்வாறு செல்லும் போது மாணவி செல்லும் வீதியில் பாடசாலைக்கு அண்மித்த இடத்திலேயே விபத்து சம்பவம் இடம்பெற்று உள்ளது.

விபத்து இடம்பெற்ற பின்னர் கடற்படையினரே தமது வாகனத்தில் படுகாயமடைந்த சிறுமியை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்து அனுமதித்துள்ளனர். எனினும் சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழுந்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை தகவல்கள் கூறுகின்றன.

விபத்தினை ஏற்படுத்திய கடற்படையின் வாகனம் எங்கு எவ்வாறு மாணவியை மோதியது என்பது குறித்து நேற்று மதியம் வரையில் யாருக்கும் தெரியாத நிலையே காணப்பட்டது. யாழ்.போதனா வைத்திய சாலையில் மாணவி அனுமதிக்கப்பட்டதன் பின்னரே வீட்டார், பாடசாலை சமூகத்தினர் மற்றும் அயலவர்களுக்கு மாணவி உயிரிழந்த சம்பவம் தெரிய வந்துள்ளது.

கூலித்தொழிலாளியான தந்தையை கொண்ட மேற்படி மாணவியின் குடும்பம் வறுமையான குடும்பம் எனவும் குடும்பத்தில் மாணவியே முதலாவது பிள்ளை மற்றும் ஒரு சகோதரர், சகோதரி ஆகியோர் உள்ளதாகவும் எதிர்வரும் பத்தாம் திகதி மாணவியின் பிறந்த நாள் வருகின்றது எனவும் உறவினர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர் ஒருவரும் கூறினர்.

கடற்படையின் வாகனம் மிக வேகமாக வந்து மோதியமையினாலேயே மாணவி உயிரிழந்ததாக மாணவியின் உறவினர் ஒருவர் வலம்புரியிடம் கூறினார். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஊர்காவற்றுறை பொலிஸார் விபத்தினை ஏற்படுத்திய வாகனத்தின் சாரதியான என்.எம்.டி குமார எனும் கடற்படை சிப்பாயை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிப்பாய் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 17-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-4)

## தமிழக உறவுகளு...

நினைத்துப்பார்க்க முடியாத துயரினைத் தமிழகம் இன்று சந்தித்திருக்கின்றது. வானம பிளந்ததுபோலக் கொட்டித்தீர்த்த மழை ஆற்றுபபடுத்தவே முடியாத அளவுக்குத் தமிழகத்தினை வாட்டி வதைத்திருக்கின்றது. தமிழகமே வெள்ளக்காடாகிப் பல இலட்சம் மக்கள் தமது சொந்த வீட்டில் வாழமுடியாத நிலையில் இடம பெயர்ந்து அவலத்துக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

தாழ்நிலங்களில் வாழ்ந்த ஏழை மக்களில் பலரது உயிர்கள்கூட இழக்கப்பட்டிருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. பல்லாண்டுகளாக மக்கள் சிறுகச்சிறுகச் சேமித்த, சேகரித்த சொத்துக்கள்கூட அழிவடைந்திருக்கின்றன. வார்த்தைகளுக்குள் விபரிக்கமுடியாத துயர் நிறைந்த இவ்வாறான வாழ்க்கையைத் தமிழகத்திலிருக்கும் எங்களுடைய தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றார்கள்.

எமது மண்ணில் கொத்துக்கொத்தாகத் தமிழ் மக்கள் செத்துவீழ்ந்தபோது தானாடா விட்டாலுந் தன் தசை ஆடும் என்பதுபோல முதலில் வீதியில் இறங்கியவர்கள் தமிழக மக்களே. அவர்கள் மேற்கொண்ட தொடர் போராட்டங்கள் சர்வதேச அரங்கையே உலுக்கும் அளவுக்கு வீரியம் பெற்றிருந்தன. அவ்வாறான எங்களுடைய தமிழுறவுகள் இன்று இயற்கைச் சீற்றத்தால் ஆற்றொண்ணாத் துயரத்தில் ஆழ்ந்துள்ளார்கள்.

அவர்களின் துயரமும் துன்பமும் எம்மக்கள் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியுள்ளன.

எங்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் மழை வெள்ளம் ஏற்பட்டு மக்கள் இடம் பெயர்ந்து மீண்ட சம்பவங்களும் தற்போது நிகழ்ந்துள்ளன. மீண்டும் அவ்வாறான நிலை யேற்படுமோ என்ற பயம் இல்லாமல் இல்லை. ஆனாலும் தமிழகத்துடன் ஒப்பிடுகின்றபோது அங்கு நிகழ்ந்திருக்கின்ற பேரிடருக்கு நிகரான பாதிப்பினை எங்கள் மக்கள் சந்திக்கவில்லை.

பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு வடமாகாண மக்கள் எவ்வாறான உதவிகளை வழங்க முடியும் என்பதை எமது அமைச்சரவைக் கூட்டம் தீர்மானிக்கும்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது அவல நிலையிலிருந்து விரைவில் விடுபட நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது. (எ-11)

## புலிகளைத் தோற்...

இந்தியாவும், அமெரிக்காவும் தமிழீழ விடுதலைகளுக்கு எதிரான யுத்தத்தின் போது புலனாய்வுத் தகவல்களை வழங்கியதாக அரசாங்கம் நேற்று பாராளுமன்றில் அறிவித்துள்ளது.

குறிப்பாக கடற் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது அமெரிக்காவும் இந்தியாவும் புலனாய்வுத் தகவல்களை வழங்கியதாகவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா ஆட்சி செய்த காலத்திலும் தகவல்கள் வழங்கப்பட்டதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின்,ஆட்சிக் காலத்திலும் இந்த தகவல்கள் வழங்கப்பட்டதாகவும் பிரதமர் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் பாரியளவில உதவிகளை வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2005-ம் ஆண்டின் பின்னர் கடந்த அரசாங்கம் புலிகளை இல்லாதொழிக்கும் நோக்கில் கிழக்கில் நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என கடந்த மகிந்த அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு வாக்குறுதி அளித்திருக்கக் கூடாது. அந்த பிழையை தற்போதைய அரசாங்கம் சரி செய்து வருவதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இராணுவத்திற்கு எதிராக செயற்படாது என்ற போதிலும் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமல் போன சம்பவம், ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் போன்றன குறித்து விசாரணை நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## விடாது விரட்...

றும் கரையோர பகுதிகளில் நேற்று இரவு பலத்த மழை பெய்துள்ளது.

ஏனைய பகுதிகளில் மழை சற்று குறைவடைந்திருந்த போதிலும் மழைநீர் வெளியேறாததால் மீட்பு பணிகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மக்கள் வெளியேற முடியாத வகையில் வீதிப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் விமான சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன,

மேலும் சென்னை சர்வதேச விமான நிலையம் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சுமார் 5ஆயிரம் பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகத்தில் பெய்த கனமழையால் சுமார் 15ஆயிரம் கோடி இந்திய ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக இந்திய தொழில் மற்றும் வர்த்தக ஒருங்கிணைந்த கூட்டமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

100 ஆண்டுகள் இல்லாத வகையில் பெய்த கடும் மழையினால் தனித்தீவான சென்னை மாநகரத்திற்கு நேற்று முன்தினம் பிரதமர் நரேந்திர மோடி விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெள்ள நிவாரண நிதியாக ஆயிரம் கோடி இந்திய ரூபாயை வழங்குவதாகவும் இதன்போது பிரதமர் உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கை மீளவும் வழமைக்கு திரும்பும் வரை உணவுப் பொதிகளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## தீக்காயத்துடன்...

நள்ளிரவு 12 மணியளவில் கோண்டாவில் மேற்கில் இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப மாணவி தவணைப் பரீட்சையில் குறைவான பெறுபேறுகளைப் பெற்றதனால் ஏற்பட்ட மன உளைச்சலிலேயே தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்ய முயற்சி செய்துள்ளார்.

தீக்காயங்களுக்குள்ளான மாணவி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-12-4)

## பட்ஜெட்டுக்கு...

விடயங்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்படும் வரையில் போராட்டம் தொடர உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக இடைகிடை போராட்டம் நடத்தப்படும் எனவும், 15-ம் திகதி பாரியளவில் போராட்டமொன்று நடத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத் தொழிற்துறைசார் தொழிற்சங்கங்கள், தனியார் தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பிற்கு முன்னதாக மக்கள் விரோத சரத்துக்கள் நீக்கப்படாவிட்டால், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவி விலகி புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரையில் போராட்டம் தொடரும் என தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (எ-11)

## 3 நாட்களுக்கு...

பதால் தமிழகம் மற்றும் இலங்கையில் அனேக இடங்களில் 3 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த சில தினங்களாக பெய்த தொடர்மழையால் தமிழகம் பகுதிகள் பேரிடர் பகுதியாக அறிவிக்கும் நிலைக்கு சென்றது. சென்னை மாநகர் இதர பகுதிகளில இருந்து துண்டிக்கப்பட்டது.

இது தொடர்பாக, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது,

இலங்கை மற்றும் வட தமிழகத்தை ஒட்டிய கடல் பகுதியில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே பகுதியில் நீடிக்கிறது. இதன காரணமாக இலங்கையில் அனேக இடங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது. காற்றழுத்த தாழவுப்பகுதி நீடிப்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம். இவ்வாறு ரமணன் தெரிவித்தார். (எ)

## கருணாவை நியமி...

குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மனதில் இனவாதத்தை புகுத்துவது மிகவும் ஆபத்தானது. அரசியல் கைதிகளை விடுதலை செய்தமை தொடர்பாக சில சக்திகள அரசு மீது பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தி மக்களது உள்ளங்களில் இனவாதத்தை விதைகின்றனர்.

கடந்த அரசாங்கத்தின் போது தடுத்து வைக்கப்பட்டவர்கள் 12ஆயிரம் பேர் விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிலையில் எவ்வாறு அரசின் மீது விரல் நீட்ட முடியும், என கேள்வி எழுப்பினார்.

தயவு செய்து வாக்குகளை பெறுவதற்காக இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் என்பவற்றை பயன்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்தார். (எ-11)

## தமிழக மக்கள்...

தமது சொந்தங்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அனர்த்ததினால் வாழ்வாதாரங்களையும் சொத்துக்களையும் இழந்து , இடம பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வாழும் மக்களினது துயரில் தாம் பங்கேற்பதாகவும், எதிர்கட்சி தலைவர் தமது அறிக்கையின் மூலம் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை தளர்ச்சியடையாமல் வழங்கி கொண்டிருக்கும் தமிழக அரசிற்கும் , ஏனைய அரச மற்றும தனியார் ஸ்தாபனங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த நிலைமை விரைவில வழமைக்கு திரும்பி மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு மாறுவதற்கு தாம் இறைவனை பிரார்த்திப்பதாகவும் எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் தமது அறிக்கையூடாக சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## இலஞ்சம் கேட்டா...

கொடுக்கத் தேவையில்லை. அரச உத்தியோகத்தர்கள் இலஞ்சம் கேட்டால் அது தொடர்பில் 1954 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறையிட முடியும் இவ்வாறு இலங்கை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர் டயஸ் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் கபே அமைப்பு ஆகியன இணைந்து இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்னும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இலஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவற்றை ஒழிக்கும் நோக்கில் அரச நிறுவனங்களுக்குச் சென்று விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். எமது ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் மாற்றங்களை உருவாக்கி வருகின்றோம்.

இலஞ்சம் மற்றும் ஊழலை நாட்டிலிருந்து முழுமையாக ஒழிப்பதற்காக நாம் செயற்பட்டு வருகின்றோம். உயர்மட்டத்திலுள்ள இவ்வாறான விடயங்களை கையாள புதிய குழுவொன்று உருவாக்கியுள்ளோம். பொது மக்கள் எங்களுடன் இணைந்து ஒத்துழைப்பு தந்தால் எங்களால் வெற்றிகரமாக செயற்படமுடியும்

லஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்ககூடிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.இவை சம்பந்தமாக சட்டப்படி தண்டனை பெற்றுக் கொடுப்பதனை விட இலஞ்ச ஊழலை தடுத்து நிறுத்துவது எப்படி என்ற கோட்பாடு மிகவும் அத்தியாவசியமாக காணப்படுகின்றது. அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் இவ்விழிப்புணர்வை செயற்படுத்த முடியாது.

பலகோடி மக்கள் நிறைந்துள்ள இலங்கையில் நடைபெறுகின்ற இலஞ்ச ஊழலை நிறுத்த எங்களால் முடியாது.

ஆகவே அனைத்து பொது மக்களின் உதவிகளையும் நாம் நாடி நிற்கின்றோம். ஆதலால் தான் மக்களுக்கு நாம் விழிப்புணர்வு ஊட்டுகின்றோம். காரணம் இலஞ்சம் மற்றும் ஊழல் சம்பந்தமாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு மக்களுடைய ஒத்துழைப்பு அவசியமாகும் என்றார். (எ-4)

கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்
# றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம். நாவலர் வீதி, நல்லூர்.
தரம் 6 முதல் O/L வரை (2674)
தமிழ் & ஆங்கில மொழிமூல வகுப்புகள்
ஆரம்பம் 06.12.2015 ஞாயிற்றுக்கிழமை
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு விசேட ஊக்குவிப்புக்கள் உண்டு
யாழ்நகர் 07.30 a.m
நல்லூர் 10.30 a.m
- சிரேஷ்ட ஆசிரியர்களும், யாழ் நகரின் பிரபல பாடசாலை ஆசிரியர்களும் ஒன்றிணைந்த கற்பித்தல் சேவையில்
- ஒழுக்கம், கட்டுப்பாடு, ஆன்மீகம் என்பவற்றிற்கு முக்கியம் கொடுத்தல்
- மாதாந்த, தவணை பரீட்சைகள், பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு.

## ஆட்சிக்...

உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் கேட்பதை எல்லாம் கொடுப்பது நல்லிணக்கம் இல்லை. அதே போல தமிழ் கைதிகளை விடுதலை செய்யும் நடவடிக்கைகள் தொடர்பில் மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-11)

அன்பொளி கல்வியகம்
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்
புதிய ஆண்டுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
தரம் 4 - 06.12.2015 ஞாயிற்றுக்கிழமை
தரம் 3 - 07.12.2015 திங்கட்கிழமை
தரம் 2 - 09.12.2015 புதன்கிழமை
சின்னவிழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரியகல்வி ஊட்டிடுவோம்
(C-2884) இயக்குநர்

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062 (C-2878)

FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு



Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1013 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 05.12.15 சனி 8 மணி
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 07.12 @ 4pm.
கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 09.12 @ 4pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

அகரம் கல்வி நிலையம்
தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்
2015.12.06 ஞாயிற்றுக்கிழமை அன்று
தரம் 09,10,11 காலை 6.30 மணிக்கும்
தரம் 06, 07, 08 மாலை 2.00 மணிக்கும்
கொக்குவில், மல்லாகம் ஆகிய இரு நிலையங்களிலும் தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்
கொக்குவில், K.K.S வீதி, சம்பியன் சந்தியருகில் (2638)
மல்லாகம், K.K.S வீதி, காங்கேயன் வெதுப்பகத்திற்கு முன்னால்

"கல்வியுலகின் கலங்கரை விளக்கு"
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
தமிழ் & ஆங்கில மொழிமூலவகுப்புக்கள்
தரம் 6 முதல் தரம் 11 வரை
'வெற்றிக்கு வித்து' ஆரம்ப கல்விப் பிரிவு
தரம் 1 முதல் தரம் 5 வரை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
6-12-2015
ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணி
புதிய அனுமதிகள் இன்று முதல் வழங்கப்படுகின்றன. (C-2892)

நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்
கல்வியாண்டு 2016
தரம் 3 முதல் 11 வரை
ஆரம்பம் : 06-12-2015 ஞாயிறு 6.30
(வழமையான ஆசிரியர் குழு) (C-2864)




"உங்கள் ஆரோக்கியமே எங்களின் மூலதனம்"
தென்னிந்திய உணவு வகைகள்
எமது யாழ் சுவையுடன் சுவைத்து மகிழ்ந்திடலாம்
- இட்லி,
- சப்பாத்தி,
- பூரி,
- பரோட்டா,
- இடியப்பம்,
- குறிஞ்சா ரொட்டி
- தோசை வகைகள்
- பிரியாணி,
- பிறைற் றைஸ்,
- கொத்து
- ஆட்டா கொத்து,
- பன்னீர் காளான் கொத்து
நிறைந்த சுவை, குறைந்த விலை உயர் தொழில் நுட்ப இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட சமைக்க தயாரான உணவுகளும் (Ready to Cook)கிடைக்கும்.
இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 221 7885 (2633)

GROUP CLASSES SCIENCE
By : Mr.RAGUMAR
Gr : 6 - 11
(English / Tamil Medium)
077 605 9650 (2611)

## மூன்றாம் தவணை...

திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் பரீட்சை விடைத்தாள் திருத்தும் மத்திய நிலையமாக விளங்கும் 87 பாடசாலைகள் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் இரண்டு கட்டமாக நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சு அறிக்கை மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

55 நகரங்களின் 87 பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள 109 மத்திய நிலையங்களில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை வட மாகாண பாடசாலைகளில் இன்றே மூன்றாம் தவணை விடு முறை வழங்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

கணித பாடத்துக்க தனித்துவமானதோர் கல்வி நிலையம்
NEW MATHS COLLEGE
புதிய கல்வியாண்டு - 2016
தமிழ் ஆங்கில மொழிமூல கணித பாட வகுப்புக்கள் 2015-12-06 (ஞாயிற்றுக்கிழமை) ஆரம்பமாகும்
தரம் 6, 7, 8 → மு.ப 10.00 மணி
தரம் 9, 10, 11 → பி.ப 4.00 மணி
இடம் :- 158, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (Science hallக்கு அருகில்)
நிர்வாகியும் கணித ஆசானும்
தொடர்புகளுக்கு 0777071961
K.உமாகரன்
Note: மாணவர், பெற்றோரின் விருப்பத்துக்கிணங்க யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களால் ஏனைய பாடங்களும் ஆரம்பமாகின்றது. (2676)

ARUL MATHS ACADEMY
இராஜேந்திரா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
புதிய கல்வியாண்டு - 2016
தரம் 6 முதல் தரம் 11 (O/L) வரை
ஆரம்பம்
05-12-2015 சனிக்கிழமை
பி.ப 3.00 மணி (2666)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன

"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமதே ஸ்ரீ பகவதே நமஹ"
தரம் 6 முதல் O/L ற்கு
யாழ் நகரின் NO : 1
எடிசன் அக்கடமி
INTENT + EFFORT + GRACE = SUCCESS
யாழ்ப்பாணம் கலட்டி நல்லூர் கொக்குவில் சுன்னாகம்
புதிய கல்வி ஆண்டு 2016
தரம் 6 முதல் O/L வரை
English Medium / தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்
ஆரம்பம் 06.12.2015 (ஞாயிற்றுக்கிழமை)
யாழ் எடிசன் காலை 8.00 மணி
கலட்டி எடிசன் மு.ப. 11.00 மணி
நல்லூர் எடிசன் பி.ப. 12.30 மணி
கொக்குவில் எடிசன் பி.ப. 2.30 மணி
சுன்னாகம் எடிசன் பி.ப. 4.30 மணி
எங்களின் சாதனைகள்
- 1999 முதல் 16 வருடங்களாக அதிகூடிய 9A
- இன்றுவரை 170 பேர் 9A
- 3 தடவை தேசிய ரீதியில் முன்னிலை
- 7 தடவை மாவட்டத்தில் முதலிடம்
- 7 தடவை International Olympiad சாதனை
2013 - 16 பேர் 9A / 2012 - 12 பேர் 9A / 2011 - 19 பேர் 9A / 2010 - 11 பேர் 9A
O/L - 2014 எமது மாணவர்கள் 30 பேர் 9A
பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் அவர்களையும் சாதனையாளர் ஆக்குங்கள்!!
தரம் 6ற்கு 3 மாதங்கள் இலவசக் கல்வி
Contact: 077 77 37 926 (C-2875)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.